


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனரமைக்கப்படட் கலாமண்டபத் திறப்பு விழாவையொட்டி
வெளியிடப்படும்

# ஏழிசை



நல்லூர்

## இளங்கலைஞர் மன்றம்

25.01.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் விபரம்**

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | ஏழிசை |
| தொகுப்பு | : | சி. பத்மலிங்கம் |
| பதிப்பாசிரியர் | : | சோ. பத்மநாதன் |
| பக்கங்கள் | : | iii + 62 |
| முதற்பதிப்பு | : | 25.01.2025 |
| வெளியீடு | : | இளங்கலைஞர் மன்றம் |
| முகவரி | : | சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா |
| அச்சுப்பதிவு | : | குரு பிறிண்டேர்ஸ், இருபாலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொருடக்கம்

01. நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசீக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரை 01
02. செஞ்சொற்செல்வரின் ஆசியுரை 02
03. மேனாள் துணைவேந்தர் வாழ்த்து 03
04. வாழ்த்துச் செய்தி 04
05. மண்ணுலகு உள்ளமட்டும் மாட்சியொடு ஆற்றுகலை மாதாய் வாழி 05
06. செயலாளர் உள்ளத்திலிருந்து 07
07. இசையாலும் உலகாளலாம் 11
08. திரும்பிப் பார்க்கிறேன் 12
09. யாழ்ப்பாணத்து கர்நாடக இசைவளர்ச்சி ஒரு கண்ணோட்டம் 16
10. இலங்கையின் மிருதங்கப் பாரம்பரியம் 28
11. 1970 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் பரதநாட்டியத்தின் நிலை 31
12. ஆலயங்களில் மங்கல இசையில் மல்லாரிகளின் வகிபங்கு 37
13. எனது பண்ணிசைப் பயணம் 45
14. இலங்கைத் தமிழர்களின் தனித்துவமான அடையாளம்
நவீன தமிழ் நாடகங்கள் 51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசீக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரை

சுவாமிகள்

கலைகள் கடாட்சத்தாலும் ஆடல் அரசன் அம்பலவாணன் திருவருளாலும் எம் மண்ணில் உன்னத கலைப்பணி ஆற்றிவரும் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் கலைப்பணியை வாழ்த்தி ஆசி கூறுவதில் ஆனந்தமடைகிறோம். பலகலைஞர்களை உருவாக்கிய இம்மன்றம் ஆற்றிவரும் தொண்டு போற்றுதலுக்குரியது. எங்கள் ஆதீனத்தோடும் எமது முதலாவது குரு முதல்வரோடும் தொடர்புடைய சான்றோர் இணைந்து உருவாக்கிய இக்கலை மன்றம் பெருவளர்ச்சி கண்டுள்ளது. உயர்திரு பொன். சுந்தரலிங்கம் போன்ற கலைஞர்கள் இம்மன்றச் செயற்பாடுகளில் இன்றுவரை உழைத்து வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

கலையுணர்வு எம் தலைமுறையிடம் ஓங்க மேலும் மன்றம் சிறந்த பணிகள் முன்னெடுக்க வேண்டும். மன்றம் வெளியிடும் சிறப்பு மலர் சிறக்க திருவருளை வேண்டி அமைகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர்
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
தலைவர்,
சிவபூமி அறக்கட்டளை.

யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் ஆற்றி வரும் கலைப்பணியை அறியாதவர்களில்லை. இம்மன்றத்தின் பிரதான கலாமண்டபம் பாரிய திருத்த வேலைகள் நடைபெற்றதுடன் மண்டப வாயில் பல லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடத்தோடு அமைக்கப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். இப் புனிதப்பணி குறித்து வாழ்த்தி ஆசீர்வதிப்பதில் ஆனந்தமடைகிறேன். கலைகளைக் காட்டது ஓர் இனத்தின் முக்கிய கடமையாகும்.

இளங்கலைஞர் மன்றத்தின் பிதாமகராகிய இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் அவர்களின் அயராத முயற்சி இன்றுவரை தொடர்வது நாம் செய்த பாக்கியம். கலையின்பமே நிலையின்பம் எனக்கொள்ளும் மகுட வாசகத்தோடு மன்றம் தொடர்ந்து சிறப்பாக இயங்கி வருகிறது. ஆண்டுதோறும் நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தில் எங்கள் துர்க்கா மணி மண்டபத்தில் மன்றம் கலைநிகழ்ச்சிகளை நடாத்தி வருவது பாராட்டுக்குரியது. இப்பணியில் சிரத்தையுடன் பாடுபடும் திரு.ந.செல்வச்சந்திரன் அவர்களின் அக்கறை பாராட்டுதற்குரியது என்றும் எம்மண்ணில் இளைய தலைமுறைக் கலைஞர்களை உருவாக்க இளங்கலைஞர் மன்றம் கலைஞர்களை ஒற்றுமையுடன் இணைத்துச் செயற்பட வேண்டும். மூத்த கலைஞர்கள் எமது முதுசொம் அவர்களையும் தொடர்ந்து கௌரவித்து உயர்பணி தொடர பிரார்த்தித்து அமைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மேனாள் துணைவேந்தர் வாழ்த்து

**பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்**
மேனாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

"கலை இன்பமே நிலை இன்பமாம்" என்ற மகுட வாசகத்துடன் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக எங்கள் கலைகளின் நிலைபேற்றிற்காய் பணியாற்றி வரும் இளங் கலைஞர் மன்றத்தினை வாழ்த்தும் இவ் வேளை பெறுமதியானது.

இன்று புதிய பொலிவுடன் நிமிர்ந்துள்ள இளங்கலைஞர் மன்றமானது எங்கள் கலை வரலாற்றில் இளங் கலைஞர்களின் ஆளுமை விருத்தியில் கொண்ட முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது.

"நல்ல தகுதியுள்ள இளங்கலைஞர்கள் வாய்ப்பாட்டு, வாத்திய இசையில் தங்கள் திறமையை வெளிப்படுத்தமுடியாமல் பட்ட துன்பங்களை நேரில் கண்டு அவர்களைக் கைதூக்கிவிடும் நோக்கத்துடன் உருவானதே இம்மன்றம்.

என இம்மன்றம் உருவான சூழமைவை அடிக்கோடிடுவார், இம் மன்றத்தின் மூலவரான சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கம். ஆண்டுதோறும் இளங் கலைஞர்களை இனங்கண்டு ஊக்குவிக்கும் செயற்பாடுகளோடு அனைத்து கலைஞர்களுக்கும் அனைத்து கலைகளின் மேம்பாட்டுக்குமான களமாக இம்மன்றத்தினை வளர்த்தெடுத்த கலைஞர்களும் கலை ஆர்வலர்களும் எம் பண்பாட்டின் போற்றுதற்குரியவர்கள்.

இசைக்கல்வியின் ஜனநாயக விரிவாக்கத்தின் பெறுமதியை உணர்ந்த காலத்தினாலாய இம் மன்றத்தின் பணிகள் பன்முகத்தனவாய் எங்கள் பண்பாட்டு வரலாற்றுடன் இரண்டறக்கலந்துள்ளன என்றால் மிகையில்லை. ஒரு கலைஞனாக மன்றத்து அரங்குகளின் பங்கேற்பாளனாகவும் விருந்தினராகவும் இம்மன்றத்தின் பணிகளை அண்மையிலும் சேய்மையிலும் நயந்து வருபவன் என்ற வகையில், இன்றைய மன்றத்தின் எழுச்சி மனதில் எழுதும் மகிழ்ச்சி அளவில்லாதது.

தமிழிசை பற்றிய இனமரபு இசையியல் புரிதலோடு இன்றைய இசைக் கலைப் பயில்வினை மேலும் அர்த்தமுள்ளதாக்கும் காலப் பணியில் முன்னோடியான இம் மன்றத்தின் பணிகள் மென்மேலும் வளர்ந்திடவும், நூலக, வசதிகளோடும் நவீன ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு கலைக்கூட வாய்ப்புகளோடும் மன்றத்தின் செயல் எல்லைகள் விரிந்திடவும் எல்லையில்லாத அன்புடன் வாழ்த்துகின்றேன் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

சீ.வீ.கே.சிவஞானம்.
தலைவர்,
இளங்கலைஞர் மன்றம்

எமது இளங்கலைஞர் மன்றமானது, 1970களின் பிற்பகுதியில் இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்தின் முயற்சியினால் அப்போதைய பிரபல கலைஞர்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது. அக்காலத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாக் காலங்களில் ஆலய முன்றிலில் இடம்பெற்ற தெய்வீக இசையரங்குகள் இம்மன்றத்தின் எழுச்சிக்கும் பிரபல்யத்திற்கும் வழி வகுத்தன எனலாம்.

வழமையாக எல்லாப் பொது சமூக நிறுவனங்களுக்கு ஏற்படும் பிரச்சினை நிரந்த பணிமனை இல்லாமையாகும். இதனைக் கருத்திற் கொண்டு தற்போது மன்ற மண்டபம் அமைந்துள்ள காணியை 90 வருட குத்தகைக்கு பெற்று மன்றத்திற்கான மண்டபம் 1980களில் கட்டப்பட்டது.

இம்மண்டபத்தில் இள வயதினர்க்கு சங்கீதம், வயலின், மிருங்கம், கீழைத்தேய இசை போன்ற வகுப்புக்கள் தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் கட்டணமின்றி நடாத்தப்பட்டு வருகின்றன. காலப் போக்கில் எமது மண்டபம் புனரமைக்கப்பட வேண்டி ஏற்பட்டமை இயல்பானதே.

இதற்கமைய சமகால சூழ்நிலைகளுக்கு ஏற்ப முகப்புத் தோற்றம் மற்றும் மண்டபம் என்பன புனர்நிர்மாணம் செய்யப்பட்டு குளிரூட்டி மற்றும் ஒலிபெருக்கி சாதனங்கள் பொருத்தப்பட்டு 25.01.2025 ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது.

இந்தப் பணியும் மன்றத்தின் நிறுவுநர் இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் அவர்களின் முன் முயற்சியினாலேயே நிறைவு செய்யப்பட்டுள்ளது. பிரதானமாக அவரது வேண்டுகோளுக்கு இணங்க பங்களிப்பு செய்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

மன்ற மாணவர்களுக்கான கட்டணமற்ற வகுப்புக்கள் பொருத்தமான மேம்படுத்தப் பட்ட வசதிகளுடன் தொடர்ந்து வழங்கப்படும். மேலும் சகல கலை, கலாசார நிகழ்வு களுக்கும் மிகப்பொருத்தமான உட்புற மற்றும் வெளிப்புற வசதிகளை இம்மண்டபம் கொண்டிருப்பதால் இத்துறை சார்ந்தவர்கள் பயன்படுத்த வேண்டும் என வேண்டுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மண்ணுலகு உள்ளமட்டும் மாட்சியொடு ஆற்றுகலை மாதாய் வாழி

தெய்வத் தமிழைக் கவிஞர்
இராசையா குகதாசன்
(முன்னாள் பொருளாளர், இளங்கலைஞர் மன்றம்)

உத்தமராம் கலைஞரெலாம் ஒருங்கிணைந்தே
உருவாக்கு இளங்கலைஞர் மன்றம் என்றும்
வித்தகராய் கலையுலகு விளங்கு மாறே
வியனுலகு வளர்த்துவிடு வெகுநோக்கோடே
எத்தனையோ வழிவகையில் இளைஞர் ஏற்றம்
இசைத்துறையில் எய்தவரும் பணிகள்
நித்தியமே ஏற்றியிரு நிலமே போற்ற
நீடுலகை ஆளுவகை நிலைத்தே வாழி

மதிசூடு இறையருளால் மண்ணே போற்ற
மகிமை தரு வண்ணமிகு மாடம் சேர
கதீஈயு பலருமுளம் களிக்கு மாறே
கலைவளர உழைத்துவருங் காலமெல்லாம்
அதிரூப வளங்களினை அவனி காண
அதிக இளங் கலைஞரினை அகிலத் தீயும்
பதிபேணும் இளங்கலைஞர் மன்றம் என்றே
பார்போற்ற காலமெல்லாம் படர்ந்தே வாழி

நல்லாயே மிருதங்கம் வயலினோடு
நாட்டியங்கள் பாட்டுக்கள் வீணை எல்லாம்
வல்லோராய் ஆக்கவெகு வளங்களோடே
வழிப்படுத்தும் ஆசான்கள் வனப்பை ஈய
அல்லாரும் இதன்பயனை அடையுமாறே
அருமனதோ பலவசமாய் அமைத்துத் தந்தார்
எல்லோரும் போற்றுபணி இகத்தே யாற்றும்
இளங்கலைஞர் மன்றமென இசைக்க வாழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையின்ப மாயேயித் தரணி போற்றும்
தண் கலைகள் அறுபத்து நான்கும் காத்தே
மலையின்பி னாரெலாம் மகிழ்ந்தே வாழ்த்த
மங்கல வாத்திய முழக்கம் விண்ணைமுட்ட
கலையின்பந் தானேயிக் காசினிக்கே
காலமெல்லாம் நினைத்துளமே களித்து வாழ
நிலையின்ப மாமென்றே நிதமே சாற்றி
நீணிலத்தில் எந்நாளும் நிலைத்தே வாழி

கொண்டலடி வயிரவர் பேரருளினாலே
குவிகின்ற கலைஞர்களை மனத்திற் கொண்டே
கண்ணதெனும் கலைமேலும் கதித்தே யோங்க
கருதியொரு இளங்கலைஞர் மன்றம் தந்தார்
எண்ணரிய பணிகளினை இயற்ற வென்றே
இன்னிசையின் வேந்தனவன் எழுப்பு கோவில்
மண்ணுலகு உள்ளமட்டும் மாண்பார் பணியை
மாட்சியொடு ஆற்றுகலை மாதாய் வாழி

---

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று
ஓடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்.

திருவாசகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளர் உள்ளத்திலிருந்து

**காலங்கள் கடந்தாலும் தன்மை மாறாத மகா மன்றமே**
**இளங்கலைஞர் மன்றம் நல்லூர்**

**"இசைக்கலைமணி"**
**நடேசு செல்வச்சந்திரன்**
D.O – (DPCCS) - NP

இசையே தனது உயிர் மூச்சாகவும் வாழ்வுமாகக் கொண்ட "இன்னிசைவேந்தர்" பொன். சுந்தரலிங்கம் அவர்களின் தூரநோக்கு சிந்தனையும் உள்ளார்ந்த எண்ணக்கருவுடன் 1971ம் ஆண்டு இந்த மன்றம் உதித்தது.

இசை உலகின் பிரபலமான "சங்கீத வித்துவான்" "டாக்டர்" பாலமுரளி கிருஷ்ணா அவர்களால் 1981ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பெற்று வர்த்தகப் பெருமக்கள், கலைஞர்கள், இசை ஆர்வலர்களின் நிதிப் பங்களிப்புடன் இந்த பெருவிருட்ச கலா மண்டபம் அமைக்கப்பெற்றது.

ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் எங்கள் மண்ணில் குடும்பங்கள் ரீதியாக தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டுமே மேடைச் சந்தர்ப்பம் வழங்கி தங்கள் வீடுகளில், பொது வெளியில் மேடை அமைத்து நிகழ்ச்சிகளை நடாத்தி வந்தனர். இந்த நிலையை கண்டு வியப்படைந்த பொன்.சுந்தரலிங்கம் அவர்கள் திறமை மிகு ஆற்றல் கொண்ட வாய்ப்பாட்டு, வாத்திய இசைத் வல்லமை மிக்க கலைஞர்களின் ஆதங்க நிலையைக் கண்டு தோற்றுவித்ததே இந்த மன்றம். இதற்குப் பல சவால்கள், எதிர்ப்புக்கள், விமர்சனங்கள் எல்லாம் அன்றும் இருந்தது இன்றும் இருக்கிறது. ஆனால் அது தன்னிறைவு கண்டு மேலெழுந்து இன்று மகா மன்றமாக உயர்ந்துள்ளது.

இந்த மன்றம் ஆரம்பிக்கப்படுவதற்கு இதற்குப் பின்னால் கலை உணர்வு மிக்க பலரது பண உதவி, பொருள் உதவி, உடல் உழைப்பு இருந்திருக்கிறது. இன்றும் இருந்து கொண்டே இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்த மன்றத்தின் உதயம் எங்கள் மண்ணில் இசை கற்கும் மாணவர்களின் விருப்பை, ஆர்வத்தை தோற்றுவித்தது என்பதில் ஐயமில்லை. இந்த இளங்கலைஞர் மன்ற அரங்கத்திலே உருவான வாய்ப்பாட்டு, வாத்திய, பரதநாட்டியம், பேச்சாளர்கள் என பலதரப்பட்ட கலைஞர்கள் உலகப்புகழ் பெற்றவர்களாகவே வலம் வருவதை நாங்கள் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

போருக்கு முன்னர் வருடத்தில் பத்து நாட்கள், பதினைந்து நாட்கள் இசை விழாவும் இசைப் போட்டிகளும் தங்க விருதுகள் வழங்கியும் தியாகராஜ சுவாமிகள் ஆராதனையும் நடைபெற்று வந்த வேளை மண்டபம் நிறைய இரசிகர்கள் இருந்தனர்.

1995ம் ஆண்டு போர் உச்சம் கண்டபோது மக்கள் இடம்பெயர்வு, மீள மக்கள் குடியமர்வு காரணமாக ஒழுங்கான வகுப்புக்களை, நிகழ்ச்சிகளை சீராக நடாத்த முடியாத நிலை காணப்பட்டது. வகுப்புக்கள் மீள 2002ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இசைவிழாக்கள் 10 நாட்கள் ஏற்பாடு செய்வதில் பல இளங் கலைஞர்கள், மூத்த கலைஞர்கள் பங்கு கொண்டனர்.

மேலும் தொடர்ந்து மாதாந்த, வருடாந்த இசைவிழாக்கள், நல்லூர் தெய்வீக இசை அரங்கு, நவராத்திரி விழா என காலத்திற்கு ஏற்றாற்போல் தனது பணியை மன்றம் செய்து வருகிறது. மன்றத்தின் பராமரிப்பு, மின்வாடகை, பாதுகாப்பு போன்ற தேவைகளுக்காக சிறிதளவு வாடகைக் கொடுப்பனவு பெற்று தனியார் விழாக்களுக்கு மண்டபத்தை நிர்வாகத்தினர் வழங்கி வருகின்றனர்.

2010ம் ஆண்டு காலப்பகுதிக்குப் பின்னர் புலம்பெயர் நாடுகளிலிருந்து வரும் ஈழக்கலைஞர்களின் வேண்டுகோளிற்கு அமைய எங்கள் மன்றம், நல்லூர் தெய்வீக இசை அரங்கிலும் மேடைச் சந்தர்ப்பங்கள் வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது. மேலும் கலைகளின் எழுச்சிக்கு கலைஞர்களின் ஆத்மார்த்த ஒத்துழைப்பு மிகமிக அவசியமாகிறது. மன்றத்தின் இந்த வளர்ச்சியில் பங்கு கொண்டு அமரத்துவமடைந்த அனைத்து கலைஞர்களை நினைவு கூருவதுடன் அவர்களின் ஆசியும் இந்த உயர்வுக்கு காரணம் எனலாம்.

இளங்கலைஞர் மன்றம் தற்போதும் இசைப் போட்டிகளுடன் தங்க விருது களையும் கலைஞர்களுக்கு மேடைச்சந்தர்ப்பங்களையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழருடைய அடையாளத்தைப் பேணிக்கொள்ள எமது மண்ணிலே கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கு முன்னர் மின்சாரம், போக்குவரத்து இல்லை, கணினி, இணையவசதி இல்லை இத்துடன் பாரிய பொருளாதார தடைகளுக்கு மத்தியில் கலை, பண்பாட்டு கட்டமைப்பு இருந்தபோது கலைகளும் கலைஞர்களும் இரசிகர்களையும் நிகழ்வுகளில் காணக்கூடியதாக இருந்தது. தற்போது கையிலே உலகம் (Smart phone தொழில்நுட்பம்) இவை அனைத்தும் விரிவடைந்த நிலையில் கலைகள், கலைஞர்கள் இரசிகர்கள் எங்கே? என்று தேட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளதுடன் தற்போது கலைகளுக்கான பொது அமைப்புக்களில் தொண்டாற்றக்கூடியவர்கள் மிகமிகக் குறைந்தவர்களே சேவை செய்வதை காணக்கூடியதாகவுள்ளது. ஆகவே கலைஞர்கள் முதலில் தங்களை வளர்த்து தங்களுக்கான இரசிகர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பும் எழுந்துள்ளது.

அத்தனை தடைகளையும் தாண்டி மன்றம் தனது பணிகளை செவ்வனே செய்து வரும் நிலையில் நிறுவுநர் பொன். சுந்தரலிங்கம் மாஸ்டர் அவர்களின் ஆலோசனையிலும் நிர்வாகத்தின் வேண்டுகோளிற்கமைய மன்றத்துக்கு நெருக்கமான எம் புலம்பெயர் உறவுகள் வர்த்தகப்பெருமக்களும், கலைஞர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகளின் நல்லாதரவோடு 2024 தைப்பூச நன்னாளில் அத்திவாரமிட்டு ஆரம்பித்த புனரமைப்புக் கட்டட வேலைகள் 2025.01.25 இல் திறப்புவிழா காண்பது உண்மையில் இறைகடாட்சம் என்றே சொல்லலாம். இந்தப்பணியில் இணைந்திருந்த அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க நம்கலை, வளர்க எம் மன்றம்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாக சபை

நிறுவுநர் : திரு. பொன். சுந்தரலிங்கம்

காப்பாளர்கள் : திரு. ஆறு. திருமுகன்
திரு. சோ. பத்மநாதன்
திரு. சு. பாலசண்முகநாதன் (அமரர்)

தலைவர் : C. V. K சிவஞானம்

துணைத்தலைவர்கள்

திரு. E. S. P நாகரத்தினம்
திரு. S. பத்மலிங்கம்
திரு. V. K பஞ்சமூர்த்தி
திரு. N. R.S. சுதாகரன்
திரு. ச. சிவானந்தன்

சர்வதேச தொடர்பாளர்

திரு. S. பத்மலிங்கம்

செயலாளர் : திரு. ந. செல்வச்சந்திரன்

உபசெயலாளர்: திரு. க. சோமசேகரம்

பொருளாளர் : திரு. ச. சிவகுமரன்

நிர்வாக உறுப்பினர்கள்

திரு. P. S. பாலமுருகன்
திரு. பொன். சுபாஸ்சந்திரன் (அமரர்)
திரு. இ. குகதாசன்
திரு. இ. வசீகரன்
திரு. மு. ஜெனகன்
திரு. அ. செல்வரத்தினம்
திரு. S. சற்குணமூர்த்தி
திருமதி குமுதா உமாகாந்தன்
திருமதி சந்திராதேவி சுபாஸ்சந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளங்கலைஞர் மன்றத்தின் பழைய தோற்றம் - 2023 வரை










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கலைஞர் மன்றத்தின் பழைய தோற்றம் - 2023 வரை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசையாலும் உலகாளலாம்

ஆக்கம்:
கவிஞர் சோ.ப

ராகம் : லதாங்கி தாளம் : ஆதி

பல்லவி

இசையாலும் உலகாளலாம்
இன்னிசையாலும் உலகாளலாம்
(இசையாலும்)

அனுபல்லவி

அசையாத நிலை காணலாம் - துன்பம்
அணுகாத முகடேறி நடைபோடலாம்
(இசையாலும்)

சரணங்கள்

தாலாட்டோடு ஆரம்பமாம் - இசைத்
தமிழின்றி உலகத்தில் ஏதின்பமாம்?
கோலாட்டம் கரகங்களாம் - இனிமை
கொஞ்சும் தென் சிந்துக்கு நிகரென்னவாம்?
(இசையாலும்)

கொடுநோயின் வலிபோக்கலாம் - பிற
குறைபோய் எம் அபிலாஷை நிறைவேற்றலாம்
இடர் யாவும் பொடியாக்கலாம் - அந்த
எமனோடும் சமனாக எதிர்மோதலாம்
(இசையாலும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரும்பிப் பார்க்கிறேன்

சங்கீத பூஷணம் பொன்.சுந்தரலிங்கம்

நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசை பயின்று சங்கீத பூஷணம் பட்டம் பெற்று 1966ஆம் ஆண்டு தாயகம் திரும்பினேன். எமது சூழலை நோக்கியபோது, இசை பயிலும் வாய்ப்பு மிகக் குறைவாகவே இருந்தது. இசைப் பயிற்சியும் கச்சேரி வாய்ப்புக்களும் ஒரு சில குடும்பங்களுக்குள் முடங்கிக் கிடந்தன.

இளங்கலைஞர்கள் இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவோ தங்களது திறன்களை வெளிப்படுத்தவோ எந்தவிதமான வாய்ப்போ மேடை வசதிகளோ இருக்கவில்லை. இசை மன்றங்கள் அனைத்தும் ஒரு சில இசைக் குடும்பத்தினரால் நிறுவப்பட்டு செயற்பட்டுவந்தன. இந்நிலையில் நல்ல தகுதியுள்ள இளங்கலைஞர்கள் வாய்ப்பாட்டு மற்றும் வாத்திய இசையில் தங்கள் திறமையை வெளிப்படுத்த முடியாமற்பட்ட துன்பங்களை நேரில்கண்டு அவர்களைக் கைதூக்கி விடும் நோக்கத்துடன் உருவானதே இளங்கலைஞர் மன்றம்.

இன, மத பேதமற்ற வசதிபடைத்த, வசதியற்ற எல்லோருக்கும் பொதுவான நிலையமாகவும் இலைமறை காயாகவுள்ள கலைஞர்களை வெளிக் கொணர்வதே இதன் ஆரம்ப நோக்கமாக இருந்தது. இளங்கலைஞர்களை ஊக்குவிக்க இசைப்போட்டிகளை வைத்து பரிசில்கள் வழங்கி கலைஞர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த மேடைச் சந்தர்ப்பங்கள் வழங்குதல் என்பனவும் குறிக்கோள்கள். இதற்காக 10 நாள் இசைவிழா, 3 நாள் தியாகராஜ உற்சவம் நடாத்தி கூடுதலாக இளங்கலைஞர்களுக்கு மேடைச்சந்தர்ப்பம் வழங்கி அவர்கள் விரும்பும் கலைகளைப் பயில இசை வகுப்புக்கள் நடாத்துதல் என்பன முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்களாகும். அந்தக் காணியில் வகுப்பறைத் தொகுதியமைத்து இசைவகுப்பை ஆரம்பித்து வாய்ப்பாட்டு, வயலின். வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், பரதநாட்டியம் போன்ற பாடங்களை, தகுதியான ஆசிரியர்களைக் கொண்டு நடாத்தி வந்தோம். 1970 - 80 வரை எமது மன்ற வகுப்புக்கள், இசை விழாக்கள் நடத்த யாழ்.திவ்விய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்விய ஜீவன சங்க மண்டபத்தைத் தந்துதவிய சங்க நிர்வாகத்துக்கு எமது கடப்பாடு பெரிது.

நல்லூர் முருகன் உற்சவ காலத்தில் தினமும் கோயில் முன்றிலில் தெய்வீக இசை அரங்கு நடத்த அனுமதி தந்த ஆலய அறங்காவலர் குமாரதாஸ் மாப்பாண முதலியார் தந்த ஆதரவு மறக்கற்பாலதன்று.

கலாமண்டப நிர்மாணம் எமது சக்திக்கு மிஞ்சிய பணி. நிதி சேகரிப்பதில் முழுமூச்சுடன் இயங்கிய ஆலோசகர்கள்

1. Advocate K.V.சண்முகநாதன் (ஆலோசகர்)
2 பொன்னம்மைதேவி பத்மநாதன் (ஆலோசகர்)
3. அருட்தந்தை மரியசேவையர் அடிகளார் (திருமறைக் கலா மன்றம்)
4. கலாநிதி ஆறு.திருமுருகன் ( ஆலோசகர்)

ஆட்சிக் குழு உறுப்பினர்கள்

1. திரு.சீ.வி.கே.சிவஞானம் (தலைவர், மகாண சபை
2. திரு.ந.செல்வச்சந்திரன் (செயலாளர்)
3. மு. இராமலிங்கம், பாடசாலை அதிபர் (காரியதரசி)
4. சிவகுமார் (பொருளாளர்)

நிதிசேகரித்து உதவியவர்கள்

1. தவில் வித்வான் NR.சின்னராஜா
2. நாதஸ்வர மேதை NK.பத்மநாதன்
3. நாதஸ்வரக் கலைஞர் KM.பஞ்சாபிகேசன்
4. தவில் வித்வான் கணேசபிள்ளை
5. தவில் வித்துவான் புண்ணியமூர்த்தி
6. நாதஸ்வரம் கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி சகோதரர்கள்
7. ‘மகாராணி’ சோமசுந்தரம்
8. K.A.ஆர் கலாம் ( கலாம் ஹாட்வெயர்ஸ்)
9. வினோதினி லிங்கநாதபிள்ளை
10. Light Engine Mano

கைகொடுத்த கலைஞர்கள்

1. மிதிலா யோகரட்ணம்
2. வாசுகி மகாரட்ணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஜெயமணி ஐயாத்துரை
4. பொன். சுபாஸ்சந்திரன்
5. திருமதி. சந்திரா சுபாஸ்சந்திரன்
6. திரு. துஷ்யந்தன் சுபாஸ்
7. சங்கீதபூஷணம் S.பத்மலிங்கம்
8. சங்கீதவித்வான் தனதேவி மித்ரதேவ
9. சங்கீதவித்வான் பாக்கியலக்சுமி நடராஜா
10. சங்கீதவித்வான் வரதவாணி விவேகானந்தன்
11. கமலமனோகரி குமாரசாமி
12. மேரிசரோஜா ஜஸ்ரின்
13. மிருதங்க வித்துவான்கள்
சிதம்பரநாதன், மகேந்திரன், பிரணவநாதன், செல்வரட்ணம்

மண்டபம் மீளமைப்புக்குதவிய பேருபகாரிகள் :

1. முன்மண்டபம் அன்பளிப்பு : தங்கராசா ரூபன் ( வர்த்தகர், கனடா)
2. மண்டபக் குளிரூட்டி அமைப்பு (A/C) : வர்த்தகர் செல்வராசா (Abirami Catering, கனடா)
3. ஒலிபெருக்கி (Sound system) : ஜமுனா ஜெயந்தி லிபாகரன் குடும்பத்தினர் (கனடா)

மேலும் கட்டிடஅமைப்புக்கு நிதி உதவி வழங்கிய கனடா, லண்டன், சுவிற்சலாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சார்ந்த கலைஞர்கள், இசை ஸ்தாபனங்கள், இசை பயிலும் மாணவர்கள், வர்த்தக பிரமுகர்களுக்கும் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இம்மண்டபத்தை அழகுற அமைத்துத்தந்த கட்டிட நிபுனர் (SRT Constructions) துவாரகன் சந்திரரட்ணம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மீண்டும் தொடங்கும் மிடுக்கு** காலத்தின் ஓட்டத்தைக் கருத்திற் கொண்டு, கலாமண்டபத்தைப் புனரமைத்து நவீன வசதிகளைச் செய்தாக வேண்டும் என்ற முனைப்போடு மன்ற நிர்வாகம் எனக்கு அழுத்தம் தந்தது நான் புலம்பெயர் நாடுகளில் வாழும் கலைஞர்கள் மற்றும் தாராள மனம் கொண்ட பெரியோர்களை அணுகினேன். தாயகத்தின் மீதும் கலைஞர்கள் மீதும் கொண்ட காதலால் புனரமைப்புக்கு உதவிய தொழிலதிபர்கள் :


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981இல் கர்நாடக சங்கீதத்தில் உச்சந்தொட்ட டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா நேரில் வந்து, அடிக்கல் நாட்டி கட்டுமாணப்பணியைத் தொடங்கி வைத்தார். திறப்பு விழாவை நடத்தி உற்சாகமாக இசை நிகழ்ச்சிகளை நடத்தி வருகையில், போர்ச்சூழலும் வலிகாமம் இடப்பெயர்வும் (1995) எம் திட்டங்களை ஸ்தம்பிக்கச் செய்தன. நானும் புலம்பெயர நேர்ந்தது. நான் நாட்டில் இல்லாத சூழ்நிலையில் மன்றத்தைக் கட்டிக்காத்த நாதஸ்வர கலாநிதி என்.கே.பத்மநாதன், தவில் விற்பன்னர் N.R.சின்னராசா, சங்கீதபூஷணம் S.கணபதிப்பிள்ளை, சங்கீத பூஷணம் வி.சிவஞானசேகரம், கலாபூஷணம் மு.சு.சுந்தரமூர்த்தி, கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி சகோதரர்கள், மாநகர சபை ஆணையாளர் C.V.K. சிவஞானம், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், மகாராணி சோமசேகரம், கா. சிவாநந்தன், அமரர் சு.பாலசண்முகநாதன், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோருக்கு நன்றி பாராட்டுகிறேன்.

அன்னை துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி என்மீது அன்பு பாராட்டி ஆதரவு தந்த ஒருவர். மன்றம் தளர்ச்சியடைந்திருந்த காலகட்டத்தில், நல்லூரில் துர்க்காமணிமண்டபம் திறந்து வைக்கப்பட்ட நாள் முதல் உற்சவ கால தெய்வீக இசையரங்கை நடத்த அனுமதி தந்தமையை நன்றியோடு நினைவு கூருகிறேன்.

இந்தப் புனரமைப்பு பாரிய பொருட்செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாம் கையேந்திப் பெற்ற வளங்களைத் தமிழ்ச்சமூகம் பயன்படுத்தி ஒளிமயமான ஓர் எதிர்காலத்தைக் காண வேண்டும் என்பதே என் வேண்டுகோளும் பிரார்த்தனையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்து கர்நாடக இசைவளர்ச்சி ஒரு கண்ணோட்டம்

எஸ். பத்மலிங்கம்
இசைக்கலைஞர்

யாழ்ப்பணத்தின் கலை வளர்ச்சியினை ஆராய முற்படின் நீண்ட காலமாக இசையும் நடனமும் கோவில்களைத் தளமாகக் கொண்டே வளர்க்கப்பப்பட்டன. யாழ்ப்பாணத்தினைத் தளமாகக் கொண்டு வாணிபம் செய்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கோவில்களைக் கட்டி கலை நிகழ்ச்சிகளை கோவில் விழாக்களில் நடாத்தியும், ஆதரித்தும் வந்தனர். அதன் தொடர்ச்சியாக 1790ஆம் ஆண்டு வைத்திலிங்கச் செட்டியாரால் வண்ணை வைத்தீஸ்வரர் கோவில் கட்டப்பட்டது. இவ் ஆலயத்திற்குச் சேவகம் செய்வதற் கென தமிழ்நாட்டிலிருந்து நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டு ஆலயச் சுற்றுப்புறங்களில் குடியமர்த் தப்பட்டனர். அத்துடன் தேவதாசிகள் என்றழைக்கப்படும் கோவிற் கலைஞர்களும் நியமிக்கப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. யாழ்ப்பாண இசைப் பாரம்பரியத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக வண்ணார்பண்ணையில் அப்போதைய சூழல் மையமாகவிருந்து ஒரு மரபினைக் கொண்டதாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இலங்கையின் வட பிராந்தியத்தின் நல்லூரைத் தளமாகக் கொண்டு ஆட்சி நடாத்திய தமிழ் மன்னர்களும், தமிழ் பண்பாட்டையும், கலைகளையும் வளர்ப்பதற்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கினர். யாழ்ப்பாணத்து மன்னர்கள் பொதுவாகத் தமிழகத்துடன் நெருங்கிய அரசியல், பொருளாதாரப் பண்பாட்டு உறவுகளைக் கொண்டிருந்தனர். அதன் காரணமாகவும் யாழ்ப்பாணத்தில் இசை, நடனம், நாடகம் போன்ற கலைகள் வளர்ச்சியடைந்து அவைக்காற்றுக் கலைகளாக மட்டுமன்றி கோவிற் கலைகளாகவும் பெரிதும் போற்றப்பட்டு வந்தன.

ஒரு நாடு விடுதலையடைய வேண்டுமாயின் அந்நாட்டு மக்களின் பண்டைய கலைகளும், பண்பாடுகளும் மறுமலர்ச்சிகண்டு வளர்ச்சி பெறவேண்டும். இவ்வாறு வளர்ச்சி பெற்றால்தான் அது முழுமையான விடுதலையாகும்.

யாழ்ப்பாண மக்களின் கலைவளர்ச்சி பற்றி எண்ணிய பெரியார்களுள் சேர். பொன். இராமநாதன், கலாயோகி ஆனந்தகுமாரசாமி, விபுலானந்த அடிகளார், இராமநாதனுடைய மருகர் சு.நடேசபிள்ளை, எம். எஸ். பரம் போன்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் யாழ்ப்பாண இசை வளர்ச்சிக்கு ஆற்றிய அப்போதைய தொண்டு மிகப் போற்றத் தக்கதாகும்.

கர்நாடக இசையைப் பொறுத்தவரையில் அது வாய்ப்பாட்டு, வயலின், வீணை, புல்லாங்குழல், நாதஸ்வரம் என வளர்ச்சி பெற்றிருக்கிறது. வாய்ப்பாட்டு இசை, வாத்திய இசை இரண்டும் சாஸ்திரிய ரீதியிலும், நாட்டாரியல் ரீதியிலும் நிலவின எனலாம்.

யாழ்ப்பாணக் கர்நாடக இசை வரலாற்றில் வாத்திய இசைப்பிரிவில் நாதஸ்வரம் மிக முக்கிய இடத்தினைப் பெறுகிறது. செந்நெறி இசைமரபான கர்நாடக இசையினை அதே இறுக்கத்துடன், கட்டிக்காத்துவந்த தனிச் சிறப்பு இந்த நாதஸ்வரத்துக்கே உரியது எனலாம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இதற்கு அடிப்படையான வாயப்பாட்டு இசைகூட இங்கு சிறிதளவேனும் முக்கியம் பெறவில்லை எனக் குறிப்பிடலாம்.

இலங்கையைப் பொறுத்தவரை கர்நாடக வாய்ப்பாட்டு இசை, வாத்திய இசை மரபானது 19ஆம் நூற்றாண்டிலிருந்தே தலைகாட்டத் தொடங்கியது எனலாம். அக்காலத்தில் கோவில்களை அடித்தளமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வந்த உள்ளூர் கலைஞர்களின், குறிப்பாக தமிழகக் கலைஞர்களின் சதிர்க்கச்சேரிகளின் (சின்னமேளம்) ஆரம்பத்திலே பக்தி கலந்த சில பாடல்களை கர்நாடக இசையுடன் பாடினார்கள். தமிழகத்திலிருந்து வந்த இக் கலைஞர்கள் ஓரளவு கர்நாடக இசை அறிவுடன் மக்களைக் கவர்ந்து ஜனரஞ்சகமாகப் பாடினாலும், சதிர்க்கச்சேரிகளில் அப்பாடல்களில் செந்நெறி இசையான கர்நாட இசையின் மரபு இருந்ததென்றே கூறலாம். இதுவே, யாழ்ப்பாணத்தில் வாய்ப்பாட்டு இசை பரவுவதற்கு அடித்தளமாகவிருந்தது.

இசையைப் பொறுத்தவரையில் நாதஸ்வரம், வயலின், வீணை, புல்லாங்குழல் போன்ற எந்த கர்நாடக வாத்தியங்களைப் பயின்றாலும் யாவற்றுக்கும் அடிப்படை வாய்பாட்டுத்தான். அக்காலத்தில் இக்கலைகளை சாஸ்திரிய முறைகளில் பயில்வதற்கு இசைப் பள்ளிகளோ, நிறுவனங்களோ அவ்வளவாக இருக்கவில்லை. மேலும், 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தின் வண்ணார் பண்ணையில் வாழ்ந்த புத்துவாட்டி குடும்பம் யாழ்ப்பாணத்தின் கர்நாடக இசைமரபின் முக்கிய கர்த்தாக்களாகக் கருதப்படுகின்றனர். தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து குடியேறிய இவர்களின் வருகைக்குப் பின்னரே இங்கு சாஸ்திரிய இசையின் பயில்வு ஆரம்பிக்கப் பட்டதெனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970இற்கு முன் செந்நெறி இசைமரபான கர்நாடக இசையில் அதீத நாட்டம் கொண்டவர்கள் தமிழ்நாட்டுக்குச் சென்று பயிலும் சூழலே காணப்பட்டது. அப்போது வாய்பாட்டுத் துறையில் இலங்கையின் தரம் குறைவாக இருந்தாலும் இந்தியாவில் பயின்ற என். சண்முகரத்தினம், பரம் தில்லைராஜா, ராம் குமாரசாமி போன்றோர் இத்துறையில் சிறந்து விளங்கினர் என்பது உண்மையே. ஆனால் இவர்களும் தங்கள் திறன்களை பட்டை தீட்டிக் கொள்ளும் சூழல் அவ்வளவாக இங்கு இருக்கவில்லை என்றே கூறலாம். புத்துவாட்டி சோமசுந்தரம் வாய்ப்பாட்டு, வயலின் போன்ற வாத்தியக் கருவிகளிலும் ஞானமுள்ளவராகத் திகழ்ந்தார். இவரும், இவரது பரம்பரை யினரும் தான் கர்நாடக வாய்ப்பாட்டிசை யாழ்ப்பாணத்தில் வளர்வதற்கு அத்திபாரமாக விளங்கினர் எனலாம்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மூத்த வயலின் இசைக்கலைஞரான ஜீ. சண்முகானந்தம் அவர்கள் புத்துவாட்டியாரின் மருகர் ஆவார். மேலும், மீசாலை வேலாயுதபிள்ளை, வயலின் வித்துவான் சித்திவிநாயகம், ரசிகரஞ்சன சபா ஸ்தாபகர் கே. வீ. தம்பு, இராமநாதன் நுண்கலைத் துறை விரிவுரையாளர் ஜெகதாம்பிகை, சாந்தநாயகி சுப்ரமணியம், கீதாஞ்சலி நல்லையா ஆகியோர் புத்துவாட்டி சோமசுந்தரத்தின் சிஷ்ய பரம்பரையினராவர். எனவே, புத்து வாட்டியாரின் குடும்பமே கர்நாடக சங்கீதத்தின் வாய்ப்பாட்டு, வயலின், வீணை, புல்லாங்குழல் போன்றவை வளர்வதற்கு மூலவேராக இருந்தது எனக் கூறுவது மிகையாகாது.

எழுபதுகளுக்கு முன் 1931ஆம் ஆண்டு வடஇலங்கை சங்கீதசபை ஆரம்பித்த போது, இசை வகுப்புகளை நடாத்துவதற்கு தரமான இசை ஆசிரியர்கள் போதுமாக இங்கு இருக்கவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு 1935ஆம் ஆண்டளவில், வேனிற்கால இசை வகுப்புகளை நடாத்தவென தமிழ் நாட்டிலிருந்து பல இசை விற்பன்னர்கள் அழைக்கப்பட்டனர். முதன்முறையாக அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைப் பேராசிரியர் எஸ். சபேசய்யர் யாழ்ப்பாணத்துக்கு அழைக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர், சித்தூர் சுப்ரமணியபிள்ளை, தஞ்சை பொன்னையா பிள்ளை, கல்யாணகிருஷ்ண பாகவதர், சபேசய்யரின் மகனான துரைசாமிஐயர், பேராசிரியர் சாம்பமூர்த்தி போன்றோர் யாழ்ப்பாணத்திற்கு வந்து இசை வகுப்புகளை நடாத்தி இசையைப் பரப்பினர். அதன் பின்னர் இந்தியாவிலிருந்து வந்து இசை வகுப்புகளை நடாத்திய விற்பன்னர்களிடம் இசையின் ஆரம்ப அடிப்படைகளைக் கற்ற நம்மவர்கள், இந்தியா சென்று இசையின் நுட்பங்களை மென்மேலும் கற்றுத் தெரிந்து கொண்டனர். அத்தகை யோரில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று, சங்கீதபூஷணம் பட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று முதன்முதலாக யாழ்ப்பாணம் வந்தவர்களில் மீசாலை கே. எஸ். வேலாயுதபிள்ளை, கே. எஸ். பாலசுப்ரமணிய ஐயர், பீ. சந்திரசேகரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். தொடர்ந்து இசையில் அதீத நாட்டம் கொண்ட நம்மவர்கள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும், சென்னை அடையாறு மத்திய இசைக்கல்லூரிக்கும் சென்று இசைத்துறையில் டிப்ளோமாப் பட்டம் பெற்றனர். தமிழ்நாட்டுக்குச் சென்று பட்டம் பெற்றவர்களில் முன்னர் குறிப்பிட்டவர்களோடு என். சண்முகரத்தினம், ஊரிக்காடு நடராஜா, அல்வின் தேவசகாயம், சித்தி விநாயகம், எஸ். சோமசுந்தரம், சரஸ்வதி பாக்கியராஜா, நாகேஸ்வரி பிருமானந்தா ஆகியோர் முதற் பரம்பரையினராவர். இவர்களில் சிலர் இந்திய இசைக்கலைஞர்களின் தரத்திற்குப் பாடும் திறனைப் பெற்றிருந்தனர்.

என். சண்முகரத்தினம் அவர்கள் கர்நாடக இசையில் முதலாந்தரப் பாடகராக யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவராவார். அக்காலத்தில் இசையின் நுணுக்கங்கள் யாவற்றையும் அறிந்து சிறந்த கற்பனை வளத்துடன் இசையின் மனோதர்மப் பகுதிகளைக் கையாளும் திறமைபெற்ற ஒரேயொரு கலைஞர் இவரே. இலங்கை வானொலியின் அதியுயர் பிரிவில் பாடியவர்களில் முதன்மையானவர். அத்துடன், இந்திய திருச்சி வானொலி நிலையத்திலும் பாடிய முதல் இலங்கையர் என்ற பெருமையும் இவருக்குண்டு. மேலும், சண்முகரத்தினம் அவர்களின் புதல்வர்களாகிய எஸ். சண்முகராகவன் வாய்பாட்டுக் கலைஞராகவும், எஸ். பிரணவநாதன் மிருதங்க வாத்தியக் கலைஞராகவும் விளங்குகிறார்கள் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

அதே காலத்தில் யாழ்ப்பாணத்தில் சிறந்து விளங்கிய பரம் தில்லைராஜா, அவரது சகோதரி பரமேஸ்வரி பற்றிக் குறிப்பிட வேண்டும். யாழ்ப்பாணத்து இசைப் பாரம்பரியத்திலும் வளர்ச்சியிலும், பரம் தில்லைராஜா குடும்பத்துக்கு பெரும் பங்குண்டு. தில்லைராஜாவின் தகப்பனார் பரம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வேலை நிமித்தம் மலேசியாவில் பலகாலம் வாழ்ந்தவர், கர்நாடக இசையில் அதிக ஆர்வம் கொண்ட பரம் மலேசியாவில் வாழும்போது அக்காலத்தில் அங்கு வாழ்ந்த யாழ்ப்பாணத்தவர்களை ஒன்றிணைத்து இசை மன்றமொன்றை அமைத்து சேவை செய்தார். மீண்டும் இலங்கை வந்த அவர் யாழ்ப்பாணத்திலும், ஒரு இசை அமைப்பை நிறுவ விரும்பி வடஇலங்கை சங்கீதசபையினை பலரின் ஆதரவுடன் ஸ்தாபித்து அரசின் வடமாநில கல்விப் பணியகத்துடன் இணைந்து நாடளாவிய ரீதியில் வகுப்புகளையும், பரீட்சைகளையும் நடாத்தி இசைப்பணியாற்றினார். தில்லைராஜாவும், பரமேஸ்வரியும் தகப்பனாரிடம் கற்றபின் இந்தியா சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் கல்வியுடன் இணைந்த இசைப்பட்டத்தை (MA) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுப் பெருமை சேர்த்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பரம் தில்லைராஜா யாழ்ப்பாணத்தில் பாடசாலை அதிபராக கடமையாற்றிக்கொண்டு "வித்துவ சபை" என்ற பெயரில் ஒரு மன்றத்தை ஆரம்பித்து இசை விழாக்களையும், வகுப்புகளையும் நடாத்திச் சேவை செய்தார். மிகச் சம்பிரதாயமாக இசையின் உச்சநிலையான மனோதர்மப் பகுதியினை சிறந்த கற்பனை வளத்துடனும் பாடாந்தர சுத்தத்துடனும் பாடும் திறன்கொண்ட தில்லைராஜா இலங்கை வானொலியின் அதியுயர்பிரிவுக் கலைஞர்களுள் ஒருவராவார். அவரது சகோதரியான பரமேஸ்வரியும் அரசாங்கத்தின் பல பதவிகளை வகித்ததோடு மட்டுமல்லாமல் சம்பிரதாயமான இசைக்கச்சேரிகளை நிகழ்த்துவதிலும் புகழ்பெற்றவர். இவரும் இலங்கை வானெலியின் அதியுயர்பிரிவுக் கலைஞராவார்.

அடுத்து யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வசித்த டபிள்யூ. எம். குமாரசாமியின் பிள்ளைகளான ராம் குமாரசாமி, சத்தியபாமா போன்றவர்களையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். டபிள்யூ. எம். குமாரசாமி கலையார்வம் மிக்க ஒரு தனவந்தராவார். கர்நாடக இசையிலும், பரதக் கலையிலும் ஆர்வம் கொண்டவராகத் திகழ்ந்தார். அதன் காரணமாக பிள்ளைகளான ராம் குமாரசாமிக்கும், சத்தியபாமாவுக்கும் சிறுவயதிலேயே அக்காலத்தில் பிரபலமாகவிருந்த அச்சுவேலி இரத்தினம்பிள்ளையிடம் அடிப்படை இசைப் பயிற்சியைக் கற்பதற்கு வழிசமைத்தார். பின்பு இருவரும், இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து இசை வகுப்புகளை நடாத்திய துரைசாமிஐயங்காரிடம் சிட்சை பெற்று இசை நுணுக்கங்கள் பலவற்றைக் கற்றுத் தெளிந்தனர்.

1953ஆம் ஆண்டு ராம் குமாரசாமியும், சத்தியபாமாவும் தமிழ்நாடு சென்று சென்னைப் பல்கலைகக்கழகத்தில் இசைத்துறையில் B.A. பட்டப்படிப்பை மேற்கொண்டு, முதல்வகுப்பில் சித்தியடைந்தனர். சென்னையில் பட்டப் படிப்பை மேற்கொண்ட சமயத்தில் மென்மேலும் இசையின் நுணுக்கங்களைக் கற்று யாழ்ப்பாணம் திரும்பிய சகோதரர்களுக்கு வடஇலங்கை சங்கீதசபையின் ஆதரவுடன் இசை அரங்கேற்றம் நடைபெற்றது. யாழ்ப்பாண இசைச் சமூகத்திடையே நல்ல வரவேற்பை பெற்ற இருவரும் இலங்கையின் பல பாகங்களிலும் கச்சேரிகள் செய்து பிரபலமானார்கள். சத்தியபாமா மீண்டும் தமிழ்நாடு சென்று தஞ்சாவூர் ரீ. எம். தியாகராஜனிடம் குருகுலவாசம் செய்து மீண்டும் தனது இசையறிவை வளர்த்துக்கொண்டார். முன்பு குறிப்பிட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களைப் போன்று இவ்விரு சகோதரர்களும் இலங்கை வானொலி அதியுயர் பிரிவுக் கலைஞர்களாவர்.

இசைப்புலவர் சண்முகரத்தினம் குடும்பம், பரம் தில்லைராஜா பரமேஸ்வரி குடும்பம், ராம் குமாரசாமி சகோதரி சத்தியபாமா குடும்பம் ஆகிய இம் மூன்று பரம்பரையினரே 1970இற்கு முன்பு யாழ்ப்பாணத்து இசை வளர்ச்சிக்கு பெரும் சேவையாற்றியவர்கள் எனக் கூறின் மிகையாகாது. 1970இற்கு முன்பு யாழ்ப்பாணத்துக் கர்நாடக இசை கோவில்களைத் தளமாகக் கொண்டு சிறு வளர்ச்சி பெற்றிருந்தாலும் மேற்கூறிய மூன்று குடும்பங்கள்தான் இந்தியக் கலைஞர்கள் போற்றுமளவிற்குச் சிறந்துவிளங்கினர். சண்முகரத்தினம் உடுவிலைத் தளமாகக் கொண்டு இசையைப் பரப்பியபோது, யாழ்ப்பாணத்தில் ராம் குமாரசாமி குடும்பம் யாழ்ப்பாணக் கலைமன்றம் என்ற பெயரில் ஒரு சபாவினையும், பரம் தில்லைராஜா குடும்பம் வித்துவ சபை எனும் பெயரில் சபாவினை ஆரம்பித்து பலகாலமாக யாழ்ப்பாணக் கலைஞர்களுக்கு இசைக் கச்சேரிகள் நடைபெற வழிசமைத்தனர்.

இக்காலகட்டத்தில்தான் யாழ்ப்பாணத்தில் இசைமன்றங்களும், நிறுவனங் களும் இசைக்கு முக்கியத்துவம்கொடுத்து இசையினைக் கற்கும் மாணவர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் தொண்டாற்றி இசையை வளர்த்தனர். அந்தவகையில், 1931ஆம் ஆண்டு எம். எஸ். பரம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட வடஇலங்கை சங்கீதசபை (NCOMS) நாடளாவிய ரீதியில் சேவையாற்றி யமையை முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்ததாக இராமநாதன் அக்கடமியைக் குறிப்பிடலாம். சேர். பொன். இராமநாதன் மருகர் நடேசபிள்ளை அவர்களால் 1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பின் இசை மேதைகள் பலரை அழைத்து யாழ்ப்பாணத்து இசை மாணவர்கள் பலரை உருவாக்கியது பெருமைக்குரிய விடயமாகும். இராமநாதன் அக்கடமிக்குப் பெரிய வரலாறே உண்டு. இந்நிறுவனம் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிவர்.

யாழ் குடாநாட்டில் 1970இற்கு முன்னரும், பின்னரும் ஆரம்பிக்கப்பட்ட பல இசை மன்றங்களும், சபாக்களும் இசை பயிலும் மாணவர்களுக்கென வகுப்புக்களையும், திறன்களை வளர்க்கவென வருடந்தோறும் இசை விழாக்களையும் நடத்தித் தொண்டாற்றினர். குடாநாட்டின் பல பாகங்களிலும் சபாக்களும், மன்றங்களும் இயங்கிவந்தாலும் ஒரு சில மன்றங்கள் மட்டுமே பெரும் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், ரசிகரஞ்சன சபா, இளங்கலைஞர் மன்றம், சங்கீதவித்துவ சபை, திருமறைக் கலாமன்றம், இசையாசிரியர் சங்கம் போன்றவை முக்கியமானவையாகும். மேலும், தென்மராட்சி இசைக்கலை மன்றம், நந்தி இசைக்கலை மன்றம், கலாமன்றம், இணுவில் இளந்தொண்டர் சபை, சாவகச்சேரி தமிழிசை மன்றம், உடுவில் இசைக்கலை மன்றம், கோப்பாய் கலைமன்றம் என்பனவும் இசையை வளர்த்துத் தொண்டாற்றினர். மேற்கூறப்பட்ட சபாக்களும், மன்றங்களும் முக்கியமாக வடஇலங்கை சங்கீத சபையினால் வருடந்தோறும் நடத்தப்படும் பரீட்சைகளுக்கு மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதையே நோக்கமாகக் கொண்டு இயங்கின. பெரிய சபாக்கள் மட்டுமே இசைவிழாக்களை நிகழ்த்தியும், கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கியும் ஊக்குவித்தன.

1970இற்குப் பின் யாழ்ப்பாணத்தவர் பலர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், அடையாறு மத்திய இசைக்கல்லூரியிலும் கற்று நாடு திரும்பினர். இக்காலத்தில் யாழ்ப்பாணத்து இசை எழுச்சி மிகுந்ததாகவே காணப்பட்டது. தமிழ்நாட்டுக்குச் சென்று இசைக்கல்வி நிறுவனங்களில் கற்றுக்கொண்டாலும், அவைக்காற்றுதிறனை வெளிப்படுத்தத் தேவையான இசையின் நுணுக்கங்களைத் தேடி இந்திய இசைமேதைகளிடம் மனோதர்ம இசையின் நுணுக்கங்களையும், பல வாக்கேயகாரர்களின் உருப்படிகளையும் கற்று தம்மை மெருகூட்டிக்கொண்டனர். அதனால் 70 தொடக்கம் 85 வரை யாழ்ப்பாணத்துக் கலைஞர்களின் தரம், இந்தியக் கலைஞர்களின் திறமைக்குச் சமமாகவே விளங்கியது. கலைஞர்கள் திறமையுள்ளவர்களாகவிருந்தால், ரசிகர்களின் ரசனையும், ஆதரவும் உயர்ந்ததாகவே இருக்கும். ஏகப்பட்ட இசைவிழாக்கள் கோவில்களிலும், திருமண விழாக்களிலும், தனவந்தர்கள் நடாத்தும் விழாக்களில் எல்லாம் இந்தியக் கலைஞர்களின் இசைக்கச்சேரிகள் அடிக்கடி நடைபெற்று வந்தன. இந் நிகழ்வுகள் யாழ்ப்பாண மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஒன்றாகக் கலந்து இசைவளர்ச்சிக்கு வலுவூட்டின என்றே கூறலாம்.

அடுத்து இலங்கை வானொலி கர்நாட இசைக்கென தினமும் ஒலிபரப்புகளைச் செய்து கலைஞர்களுக்கு ஆதரவளித்தது. இக் காலகட்டத்தில் வாய்ப்பாட்டு, வயலின், வீணை, புல்லாங்குழல் போன்றவற்றுக்கு ஆற்றுகைத்தளமாக இலங்கை வானொலியே இருந்தது. இசையைத் தொழிலாகக் கொண்டவர்களும், விருப்பு முயற்சியாகக் கொண்டவர்களும் இலங்கை வானொலியில் பாடுவதையே நோக்கமாகக் கொண்டே இசையைக் கற்றனர். இசைக்கச்சேரி செய்யுமளவிற்கு தம்மை வளர்த்துக்கொண்டவர்கள் இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியால் நடாத்தப்படும் இசைப்பரிசோதைனைக்கு விண்ணப்பம் செய்வார்கள். இசைப்பரிசோதனையில் தேறியவர்கள் ஆற்றுகைத் திறமைக்கேற்ப மூன்று பிரிவுகளாகத் தெரிவு செய்யப்பட்டு நிகழ்ச்சிக்காக அழைக்கப்படுவார்கள். அன்றுதொடக்கம் இதுவே நடைமுறையாக இருந்து வந்துள்ளது. இதனால் வாய்ப்பாட்டுக் கலைஞர்களும், வாத்தியக் கலைஞர் களும் இலங்கை வானொலியில் கச்சேரி செய்வதற்கான அனுமதித்தராதரமே அவர்களின் ஆற்றுகைத்தரத்தின் உரைகல்லாக அமைந்தது.

அதியுயர் பிரிவு (Super Grade) 60 நிமிடங்கள்
உயர் பிரிவு (A Grade) 45 நிமிடங்கள்
சாதாரண பிரிவு (B Grade) 30 நிமிடங்கள்

என மூன்று பிரிவுகளாக கர்நாடக இசை ஒலிபரப்பப்பட்டு வந்தன. இலங்கை வானொலியில் ஏழு வருடங்கள் நான் கடமையாற்றியதன் நிமித்தம் இதனைக் குறிப்பிடுகின்றேன்.

இலங்கை வானொலியின் அதியுயர்பிரிவுக் கலைஞர்களாக விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே பாடிவந்தனர்.

**வாய்ப்பாட்டுக் கலைஞர்கள்**

என். சண்முகரத்தினம்
பரம் தில்லைராஜா
ராம் குமாரசாமி
பரமேஸ்வரி விஜயரத்தினம்
சத்தியபாமா இராஜரத்தினம்
எஸ். பாலசிங்கம்
எஸ். கணபதிப்பிள்ளை
எம். ஆர். கோவிந்தராஜா
சரஸ்வதி பாக்கியராஜா
ஜெகதாம்பிகை கிருஷ்ணானந்த சிவம்
எல். திலகநாயகம் போல்
பொன். சுந்தரலிங்கம்
ஏ. கே. கருணாகரன்
எஸ். சண்முகராகவன்
எஸ். பத்மலிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வயலின் கலைஞர்கள்**

ஜீ. சண்முகானந்தம்
வீ. கே. குமாரசாமி
ஆர். முத்துச்சாமி
ரீ. வீ. பிச்சையப்பா
தனதேவி சுப்பையா
ஆர். ராதாகிருஷ்ணன்

**நாதஸ்வரக் கலைஞர்கள்**

எம். பஞ்சாபிகேசன்
பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை
என். கே. பத்மநாதன்
எம். பி. பாலகிருஷ்ணன்
எஸ். துரைராஜா

வீணை, புல்லாங்குழல் போன்றவற்றில் அதியுயர்பிரிவுக் கலைஞர்கள் இருக்கவில்லை. மேலும், நாடளாவியரீதியில் சகல பிரிவுகளிலும் உயர்பிரிவில் (A Grade) 75 கலைஞர்களும், சதாரண பிரிவில் (B Grade) சுமார் 200 கலைஞர்களும் இலங்கை வானொலியில் அவ்வப் போது நிகழ்ச்சிகளை வழங்கிவந்தனர். இந் நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்புவதற்காக இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் இசைக்கென ஒரு தனிப்பிரிவு இயங்கிவந்ததைக் குறிப்பிட வேண்டும். இலங்கை வானொலி இசைக்கலைஞர்களுக்கு சந்தரப்பங்களை வழங்கி ஒலிபரப்புச் செய்தமையானது யாழ்ப்பாணத்துக் கர்நாடக இசைவளர்ச்சிக்கு பெரும் சேவை என்றே கூறலாம். மேற்கூறிய விடயங்கள் யாவும் அக்காலகட்டத்துத் தரவுகள் என்பதை அறிக.

யாழ்ப்பாணத்துக் கர்நாடக இசைவளர்ச்சிபற்றி மேலும் ஆராய்ந்தோமாயின் 70 தொடக்கம் 85 வரை மிக உச்சநிலையிலேயே ஆற்றுகைத்திறன் இருந்தது. அதாவது, அவ்வப்போது இங்கு வரும் இந்தியக் கலைஞர்கள் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றது பெருமைக்குரிய விடயமாகும். குறிப்பிட்ட ஒருசிலரின் மனோதர்ம ஆற்றுகைத் திறமை இந்தியத் தரத்திற்கு ஒப்பாகப் போற்றப்பட்டது. 1985இற்குப் பின்னர் நாட்டில் இடம்பெற்ற அசாதாரண நிலையில் எம்மவர் வாழ்க்கைநிலையில் சில மாற்றங்கள் இடம்பெற்று கலை நிகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெற்றன. அக்காலத்தில் மாலை 6.00 மணிக்குப் பின்னர் மக்களின் நடமாட்டம் நின்றுவிடும், இதன் காரணமாகவோ என்னவோ கோவில்களைத் தளமாகக் கொண்டு வளர்ந்த எம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை நிகழ்ச்சிகளை இரவு வேளைகளில் நடாத்தமுடியாத நிலை உருவாகி நிகழ்ச்சிகள் மிக அரிதாகவே காணப்பட்டன. அதனால் கலைஞர்களுக்குத் தம் திறமைகளை ஆற்றுகை செய்வதற்கு சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே இருந்தன எனலாம்.

மேலும், நடேசபிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்ட இராமநாதன் அக்கடமி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டபின் இசையையும், நடனத்தையும் உயர்கல்வி அமைப்பிற்குள் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டார்களே தவிர மாணவர்களின் ஆற்றுகைத்திறன் வளர்வதற்கு வழிசமைக்கவில்லை. பட்டப்படிப்பு என்பது அத்துறையின் அடிப்படைத் தகைமை, அதன் பின்னரே துறைசார் நுணுக்கங்கள், அதன் விரிவாக்கம், தேடல் பற்றிய சிந்தனையுடன் செயற்பட்டால் மட்டுமே அதில் சிறந்து விளங்கமுடியும். முக்கியமாக கலைகள் மற்றக் கல்விமுறைகளைவிட வேறுபட்டவை. இசையிலும், நடனத்திலும் அதீதவிருப்பம் கொண்டவர்கள் ஒரு தவம் செய்வதைப்போன்ற மனநிலையில் செயற்பட்டால் மட்டுமே சிறந்த கலைஞனாக உருவாக முடியும். தான் கற்கும் கலையினை ஆழமாகச் சிந்திக்காமல் மேலோட்டமாக நோக்கினால் அது கைகூடாது. இசை கண்ணால் பார்க்கமுடியாத ஒரு கலையாகும். கல்வி முறையில் எவ்வளவு விஞ்ஞான தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்தாலும் மாணவனின் அபார சிந்தனையும், அர்ப்பணிப்பும், ஞானமும்தான் அவனின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். இது தொடர்பா மேலும் விரிவாகக் கூறுவதென்றால் இசை கற்கும் மாணவர்களின் ஞானத்திற்கு ஏற்றவாறு நாம் அவற்றைப் பிரித்து நோக்க வேண்டும். ஒட்டுமொத்தமாகப் பார்ப்போமானால் தற்போது இசை, நடனம் போன்ற இரு கலைகளையும் வளர்க்கும் நிறுவனமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை ஏராளமான மாணவர்களை 4 ஆண்டுக் கற்கைநெறியின் பின் பட்டப்படிப்புடன் வெளியேற்றுகின்றது. வெளியேறும் பட்டதாரிகள் மேடைகளில் பாடும், ஆடும் திறன்களைப் பெற்றிருக்கின்றார்களா என்பது சந்தேகமே. கலைகளைப் பொறுத்தவரை ஆற்றுகைத்திறன் இல்லாதவர்கள் மக்கள் மத்திதியில் வரவேற்பைப் பெறமாட்டார்கள். சமகாலத்தில் யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே இடம்பெறும் இசை, நடன நிகழ்வுகளில் மக்கள் கூட்டம் வெகு குறைவாகக் காணப்படுவதற்கு ஆற்றுகைத்திறனற்ற கலைஞர்களும் காரணம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், வாத்தியத்துறை பற்றிக் கூறவேண்டும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை வாய்ப்பாட்டு இசை வளர்ந்த அளவிற்கு நாதஸ்வரம் தவிர்ந்த ஏனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்திய இசைகள் அவ்வளவாக வளர்ச்சி பெறவில்லை என்றே கூறலாம். முறையான பயிற்சியின்மையினால் தான் வாசிக்கும் வாத்தியத்தை சுரஸ்தான சுத்தத்துடன் வாசிக்கும் திறமை இங்கு இருப்பதில்லை. இதனை எந்த அளவிற்கு எம்மவர்கள் ஏற்றுக்கொள்வார்களோ தெரியவில்லை.

பொதுவாக கர்நாடக இசையின் வாய்ப்பாட்டு மற்றும் வாத்தியங்கள் யாவற்றுக்கும் தனித்தனியான ஆற்றுகைமுறை, மரபு எதுவும் கிடையாது. கர்நாடக இசையில் மரபு, தன்மை யாவும் ஒன்றுதான். நம் வாத்தியக் கலைஞர் களிடையே தனியான மரபு ஒன்று இருப்பதாக தவறான கொள்கையொன்று இங்கு நிலவுகின்றது. வாய்ப்பாட்டில் வெளிப்படுத்தும் சகல அம்சங்களையும் வாத்தியத்தில் வெளிப்படுத்த முடியாது என்ற தப்பபிப்பிராயமே அது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை எல்லாமே கர்நாடக சங்கீதம் என்ற மரபுக்குள்ளேயே அடங்கிவிடும்.

வாத்தியத்தைக் கற்பவர்கள் யாவருக்கும் வாய்ப்பாட்டே பிரதானமாகக் கொள்ளப்படுகிறது. மேலும், கலைஞர்களின் உழைப்பு, பயிற்சி, தேடல், விடாமுயற்சி இவை யாவும் குறைவாக இருப்பதனாலேயே நம் கலைஞர்களின் ஆற்றுகைத்திறன், ஆளுமை போன்றன போதாமல் இருக்கின்றது. ஒரு வாய்ப்பாட்டு வித்துவான் வெளிப்படுத்தும் பிரயோகங்களை பக்கவாத்தியக் கலைஞர் செய்ய முடியாதிருப்பதற்குப் பயிற்சியின்மையே காரணமாக அமைகின்றது. தற்போது வயலின் கலைஞர்கள் மிக மிக அரிதாகவே இருக்கின்றனர். எதிர்காலத்தில் பக்கவாத்தியம் வாசிப்பதற்குக்கூட வாத்தியக் கலைஞர்கள் இல்லாத அளவிற்கு நம் கலைவளர்ச்சி மந்த நிலைக்கு அடைந்துள்ளது. பழைய சந்ததியினரைத் தவிர புதிய சந்ததியினர் எவரும் உருவாகவில்லையென்றே கூறலாம். அத்துடன், குருகுலக் கல்வி படிப்படியாக மறைந்து நிறுவனக் கல்வி வளர்ச்சியடைந்துள்ளதும் இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. முன்பு குருகுலக் கல்வி மூலம் இசை பயிற்றப்பட்டபோது ஆற்றுகைத்திறன் ஆளுமையுடனும், அர்ப்பணிப்புடனும் கற்பவர்கள் மத்தியில் நிலவியது குறிப்பிடத்தக்க தாகும். நிறுவனக் கல்வியாக இசை வளர்ச்சி யடைந்தபோது, தொழில் வாய்ப்புக் கருதியே பலரும் கற்கின்றனர். இதனால் கலையின் தரம், ஆளுமை, ஆற்றுகைத்திறன் ஆகியவை குறைந்து காணப்படுவது தவிர்க்க முடியாதவொன்றாகும்.

இறுதியாக, யாழ்ப்பாணத்துத் தற்கால இசை வளர்ச்சியினை சம்பிரதாய சுத்தமாக பாரம்பரியமாகக் காத்துவருபவர்கள் நாதஸ்வரக் கலைஞர்களே என்பதைக் குறிப்பிப்பிட வேண்டும். அவர்கள் குருகுலப் பயிற்சி மூலம் இசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணுக்கங்களை அர்ப்பணிப்புடன் கற்று ஆற்றுகைத் திறனுடன் வெளி வருகிறார்கள். இசை இலக்கணத்தைக் கற்காதவர்களாகவிருந்தாலும், செயன்முறையில் இசையின் சகல நுணுக்கங்களையும் அதீத பயிற்சியுடன் கற்று மக்கள் மத்தியில் கச்சேரிகள் செய்து பிரபல்யமடைகிறார்கள். நாதஸ்வரக் கலைஞர்கள் இசையை அவர்களது தொழிலாகக்கொண்டு வாழ்வதனால் சிறந்த பயிற்சி, ஆற்றுகைத்திறன் இல்லாவிடின் நீண்டகாலம் மக்கள் மத்தியில் அவர்களால் தொழிலாற்ற முடியாது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கர்நாடக இசையின் பாரம்பரியம், ஆற்றுகைத்திறன், மரபு யாவும் இன்றும் நிலைத்து நிற்கின்றதென்றால் அது நாதஸ்வர்க் கலைஞர்களால் என்பது முற்றிலும் உண்மை.

---

**திருப்படையாட்சி**

*கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு*
*களிப்பன ஆகாதே*
*காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு*
*கடைப்படும் ஆகாதே*
*மண்களில் வந்து பிறந்திடு மாறு*
*மறந்திடும் ஆகாதே*
*யாமலர்ப் பாதம் மாலறி*
*இரண்டும் வணங்குவதும் ஆகாதே*

*பண்களி கூர்தரு பாடலொ டாடல்*
*பயின்றிடு மாகாதே*
*பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்*
*பாடுது மாகாதே*
*விண்களி கூர்வதோர் வேதகம்*
*வந்து வெளிப்படு மாகாதே*
*மீன்வலை வீசிய கானவன் வந்து*
*வெளிப்படு மாயிடிலே*

*திருவாசகம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் மிருதங்கப் பாரம்பரியம்

எம். சிதம்பரநாதன்

தொன்மையானதோர் இசைப் பாரம்பரியத்தைக் கொண்டது எங்கள் இலங்கைத் திருநாடு. இன்று நேற்றிருந்தல்ல இராவணனின் காலத்திலிருந்தே தொடர்ந்து வரும் பாரம்பரியம் இதுவாகும். வீணைக்கொடியோடு ஆணை செலுத்திய இப்பெருமன்னன், இசையால் இறைவனை மகிழ்வித்து வாளும் வாழ்நாளும் பெற்றான் என்கிறது இராமாயணம். எங்கள் பண்பாட்டு மையமான யாழ்பாணத்தின் வரலாறும் இசையோடு தொடர்புபட்டே தொடங்குகிறது. பாடும் தொழிலைக்கொண்ட பாணன் ஒருவனுக்கு பரிசாகக் கிடைத்ததே இம்மண். இசைக்கும் இந்நாட்டுக்கும் இடையான பிணைப்பு மிகமிக இறுக்கமானது.

இசையின் ஒரு கூறாக விளங்கும் மிருதங்கக் கலை இம்மண்ணில் ஆழமாக வேரூன்றியுள்ளதுடன் எம்மவர் வாழும் நாடுகளிலும் கிளைபரப்பி நிற்கிறது. காலத்திற்குக் காலம் தோன்றிய கலைஞர்கள் பலரால் இக்கலை வளம் பெற்று திகழ்கிறது. அர்ப்பணிப்பு மிக்க அக்கலைஞர்களின் பணிகள் போற்றுதலுக்குரியன.

அன்றைய நாளில் எங்கள் தமிழிசை ஒலிக்கும் களமாகத் திகழ்ந்தவை இசைநாடக அரங்குகளே. அவ்வரங்குகளை லயத் தடத்தில் நடத்திச்செல்லும் தாள வாத்தியமாக மிருதங்கம் விளங்கியது. இன்றுபோலன்றி மிக அரிதாகவே மேடைக்கச்சேரிகள் இடம்பெற்றன. “சின்னமேளம்” என அந்நாளில் அழைக்கப் பட்ட சதிர்க் கச்சேரிகளிலும் இவ்வாத்தியத்தின் பங்கு முதன்மையானது. “கூத்து மத்தளம்” என்ற பெயரில் கூத்துக்களிலும் இவ்வாத்தியம் அணிசெய்தது.

இசைநாடகம் மற்றும் ஆடல் அரங்குகளை அன்று அணிசெய்த முன்னணிக் கலைஞர்களாக புத்துவாட்டி இரத்தினம், நாவாந்துறை தம்பாப்பிள்ளை, சின்னத்துரை, ஆனைக்கோட்டை மயில்வாகனம், காரைநகர் பொன்னப்பா ஆகியோர் திகழ்ந்தனர். சப்தத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் வாசிப்பு முறையை இவர்கள் பின்பற்றினர். இவர்கள் பெற்ற “கோடையிடி”, “முழக்கம்” போன்ற பட்டங்களே இவர்களின் வாசிப்பு முறையைப் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப் போதுமானவையாகும். ஒலிபெருக்கி சாதனம் பெரிதும் விருத்தி பெறாத அந்நாளில் இவ்வாறான வாசிப்பு முறைக்கான தேவை இருந்த்திருக்கலாம்.

இவர்களுக்குப் பின் கணபதியாபிள்ளை, சுப்பையாபிள்ளை, தங்கம், எம்.என். செல்லத்துரை, போன்றோர் மிருதங்கக் கலையை அடுத்த படிநிலைக்கு உயர்த்திச் சென்றனர். தென்னிந்தியத் தொடர்புகளால் இவர்களின் வாசிப்பு முறையில் நிறையவே மாற்றம் ஏற்பட்டது. நாடகப் பாணியைத் தவிர்த்து நாதத்தோடு கூடிய பண்பட்ட முறையைத் தேர்ந்தெடுத்தனர். கேட்போரின் இதயத்தைத் தொடும் இதமான வாசிப்பு கணபதியா பிள்ளையினுடையது. சுப்பையாபிள்ளை, எம். என். செல்லத்துரை ஆகியோர் கற்பித்தலிலும் சிறப்புப் பெற்று பல மாணவர்களை உருவாக்கினர்.

1950 ஆம் ஆண்டு எ.எஸ்.இராமநாதன் அவர்களின் இலங்கை வருகையோடு நாதச் செழுமையும் லயச் செறிவும் மிக்க தூய கர்நாடக பாணியிலமைந்த மிருதங்க இசை மரபொன்று அறிமுகமாயிற்று. சங்கீதபூஷணம் பட்டம் பெற்ற இவரிடம் ஒழுங்கமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு அமைவாகக் கற்றுப் பல மாணவர்கள் உருவாகினர். ஆசானாக மட்டுமின்றி தலைசிறந்த ஆற்றுகை யாளராகவும் இசை, நடன அரங்குகளை அலங்கரித்தவர் இவர். வானொலியிலும் உச்சத்தரக் (Super Grade) கலைஞராகத் திகழ்ந்தவர். இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இவர் பணி செய்த காலத்தை மிருதங்கக் கலையின் பொற்காலம் என்றால் அது மிகையன்று.

புகழ்பூத்த மிருதங்கக் கலைஞர்களான வே.அம்பலவாணர், ரி.பாக்கியநாதன், ஆர்.பிரகலாதன், ப.சின்னராசா, எம். சிதம்பரநாதன், எஸ். மகேந்திரன், எஸ்.பிராணவ நாதன் (ஜெர்மனி), ராஜசிங்கம், எஸ்.ரவிச்சந்திரா (அவுஸ்திரேலியா), ஆர்.பாலஸ்ரீ (அவுஸ்திரேலியா), ஏ.ரகுநாதன், பி. அனந்த பிரசாத் (கனடா), வி.ஸ்ரீதரன், நேசராஜா வார்ட்ஸ்வொர்த், வி. ஜம்புநாதன், ஐ.சோமசுந்தரம் (லண்டன்), விவேகானந்தன் (சுவிஸ்) ஆகியோர் இப்பேராசானிடம் வரன்முறையாகப் பயின்ற மாணவர்களே.

இலங்கையைச் சேர்ந்த வேறு சில கலைஞர்களும் தங்கள் கலைத் திறனால் ஏ.எஸ்.இராமநாதன் அவர்களின் சம காலத்தில் பேரோடும் புகழோடும் விளங்கினர். கே.சண்முகம்பிள்ளை, ரி.இரத்தினம், ஏ.கணேசசர்மா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.சந்தானகிருஷ்ணன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கொழும்பை வாழ்விடமாகக் கொண்ட இவர்கள், இலங்கை வானொலியிலும், ரூபவாஹினியிலும் தங்கள் பங்களிப்பை சிறப்புற நல்கினர். ரி.இரத்தினம் அவர்கள் நாட்டிய அரங்குகளில் தனி முத்திரை பதித்தவர். ஐ.சிவபாதம், ரி.ஜெயசுந்தரம், ஆத்மானந்தா சுகானந்தா சகோதரர்கள், ஏ.என். சோமாஸ் கந்தசர்மா ஆகியோரும் மிருதங்க கலைக்கு வளமூட்டியவர்களே. அறிமுறையில் ஆழமான புலமை கொண்டவர் சோமாஸ்கந்தசர்மா அவர்கள்.

இக்கலைஞர்களினதும் இவர்களின் வழிவழியாக வந்த கிருபாகரன் (லண்டன்), சுந்தரமூர்த்தி (நோர்வே), பிரம்மநாயகம், கண்ணதாஸ் (பிரான்ஸ்), துரைராசா, வேனிலான், வேல்மாறன், காண்டீபன், நாகராஜன் (தமிழ்நாடு), ரதிரூபன்(கனடா), மதிரூபன், அநந்தகோபன், கமலதாஸ், கஜன், வசந்தன (பிரான்ஸ்), மெட்ராஸ் கஜன், மாதவன், பிரபாகரன், திவ்யரூபசர்மா, ரட்னதுரை, ரமணா, புவியழகன்(கனடா), நந்தகுமார், பிரபாகர சர்மா, சிவசுந்தரசர்மா, ரவிசங்கர், சுவாமிநாதசர்மா, லோகேந்திரன் போன்ற மாணவர் பரம்பரை யினதும் கலைப்பணியால் தண்ணுமையின் இன்னொலி தாயகத்தில் மட்டு மல்லாது தரணியெங்கும் இன்று ஒலிக்கிறது.

---

*தாயிலார் என நெஞ்சகம் தளர்ந்தேன்*

*தந்தை உம்திருச் சந்நிதி அடைந்தேன்*

*வாயிலார் என இருக்கின்றீர் அல்லால்*

*வாய் திறந்தொரு வார்த்தையும் சொல்லீர்*

*கோயிலாக என் நெஞ்சகத் தமர்ந்த*

*குணத்தினீர், என்தன் குறை அறியீரோ*

**திருவருட்பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளங்கலைஞர் மன்றத்தின் வெளிப்புறத் தோற்றம் - 2025








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளங்கலைஞர் மன்றத்தின் வெளிப்புறத் தோற்றம் - 2025





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளங்கலைஞர் மன்றத்தின் உட்புறத் தோற்றம் - 2025









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1970 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் பரதநாட்டியத்தின் நிலை

**திருமதி. மதிவாணி விக்னராஜா**
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் - அழகியல்
வடமாகாணம்

இந்தியாவின் தமிழ் நாட்டில் தோன்றி வளர்ந்த அரிய கலை வடிவம் பரத ஆடல். இக் கலையின் சிறப்பை உணர்ந்த சிலர் தமிழகத்திற்குச் சென்று குருகுல முறையில் இதனைக்கற்று வந்து யாழ்ப்பாணத்தில் ஆற்றுகைகள் செய்தும், இளையோருக்குக் கற்பித்தும் இக்கலை இங்கு வேரூன்றி வழி வகுத்தனர். கலாயோகி ஆனந்தக் குமாரசாமி என்ற பேரறிஞர், கலைச் சுவைஞர் இந்திய நடனங்கள் பற்றி எழுதி 1918 இல் வெளியிட்ட சிவ நடனம் நூல் பரத ஆடல் பற்றிய சிந்தனையை: ஆவலை நமது மக்களிடம் முதலில் ஏற்படுத்தியது எனலாம். அக்காலத்தின் திரைப்படங்களில் இடம் பெற்ற ஆடல்கள் பரத ஆடல் மீதான ஈர்ப்பை எம்மவரிடம் உருவாக்கியது என்பது மறுக்கமுடியாதது.

இலங்கையின் பரதக் கலை வரலாற்றில் பெரும் பங்காற்றிய கலைச் செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்கள் 1940 ஆம் ஆண்டில் இந்தியாவிற்குச் சென்று 1946 - 1948 வரை தமிழர் ஆடல் வடிவங்களைக் கற்று நாடு திரும்பினார். இவரிடம் தனியார் வகுப்புகளிலும், பாடசாலைகளிலும் ஆடற்கலையைக் கற்ற பலர் மேலும் தம்மை வளப்படுத்திக் கொள்ள இந்தியாவின் தமிழகத்திற்குச் சென்று பரதக் கலையைப் பயின்று திரும்பினர். இவர்கள் தாம் கற்று வந்த கலையைத் தனியார் வகுப்புகளிலும் ஆசிரிய நியமனம் பெற்றோர் பாடசாலைகளிலும் கற்பித்து வந்தனர்.

இதுவரை (1970 வரை) தனியார் நிறுவனங்களிலும், பாடசாலைகளில் பாடத்திட்டத்தில் இணைக்கப் படாமல் பாடசாலைகளின் கலைநிகழ்ச்சிகள், போட்டிகள் ஆகியவற்றிற்காகவும் கற்பிக்கப்பட்டு வந்த நடனக்கலை புதிய பாதையில் தன் பயணத்தை ஆரம்பிக்கிறது. 1956 இல் கலைச் செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்கள் ஆரம்பித்த கொக்குவில் கலாபவனம் பரத நாட்டியக்கலை வளர்வதற்கான சிறந்த நிறுவனமாகத் திகழ்ந்து இன்றுவரை தன் கலைப்பணியை ஆற்றி வருகிறது. இங்கு பரதநாட்டியம் கற்பிக்கப்படுவதோடு கலைச் செல்வன் அவர்களது காலத்தில் கலை நிகழ்ச்சிகளும் ஆண்டு தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெற்றுவந்தன. தேசிய நிலையில் நடத்தப்பட்ட நடனப் போட்டிகளில் இங்கு ஆடற்கலை பயின்ற மாணவர்கள் பயிற்சியளிக்கப்பட்டுப் பங்கு பற்றி வெற்றியீட்டியமை பரத நாட்டியக்கலை வளர்ச்சியில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியது. பெண்பிள்ளைகள் நடனம் பயில்வதை ஏற்றுக் கொள்ளாத சமூக அமைப்பு இருந்த காலத்தில் கலைச்செல்வன் அவர்கள் மிகக் கண்டிப்போடு தன் ஆடற்கலை வகுப்புகளை முன் நகர்த்தி வந்தார். இதனால் சமூகத்தில் அனைத்து மட்டங்களிலுமிருந்து பெண் பிள்ளைகள் பரத ஆடலைக் கற்றுக் கொண்டனர்.

இசைக் கலை வளர்ப்பதை மையமாகக் கொண்டு தனியார் நிலையில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்களில் பரத ஆடலும் வளர்க்கப்பட இடம் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியை மையமாகக் கொண்டு இயங்கிய "இரசிக ரஞ்சன சபா", நல்லூர்க் கந்தசாமி கோயிலை மையப்படுத்தி நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயத்தில் செயற்பட்டு வந்த "அண்ணாமலை இசை மன்றம்" என்பன இசை வகுப்புகளுடன் ஆடல் வகுப்புகளுக்கும் வழி செய்தன.

இக் காலப்பகுதிகளில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரதேசங்களில் தமிழகத்தில் சென்று பரத நாட்டியக் கலையைப் பயின்று வந்தவர்கள் சிறியளவில் இக்கலையைக் கற்பிக்கத் தொடங்கினர். 1970 ஆம் ஆண்டளவில் "சங்கீத பூஷணம்" திரு.பொன். சுந்தரலிங்கம் அவர்கள் நல்லூர் சட்ட நாதர் கோயிலுக்கருகில் இளங் கலைஞர் மன்றம் என்ற கலை நிறுவனத்தை ஆரம்பித்தார். இந்நிறுவனம் கலைகளை ஆற்றுகை செய்வதற்கென ஒரு மண்டபத்தையும் கட்டிக் கலைகளை வளர்க்கக் களம் அமைத்தார். இங்கு கலைகள் கற்பிக்கப்பட்டதோடு ஆண்டு தோறும் இசை விழாக்கள் நடத்தப் பட்டுக் கலைஞர்களை ஊக்குவித்து அவர்களின் ஆற்றுகைகள் அரங்கேற்றப் பட்டன. இங்கு நடைபெறும் இசை விழாக்கள் 7-10 நாட்கள் நடைபெற்றுவந்தன.

இளங்கலைஞர் மன்றத்தில் இசைக்கச்சேரிகளுக்கு இணையாக ஆடல் நிகழ்ச்சிகளும் சிறப்பாக அரங்கேறின. வருடந்தோறும் நடைபெறும் இசை விழாக்களிலும் ஆடல் அளிக்கைகள் இடம் பெற்றுவந்தன. அத்துடன் ஆடல் அரங்கேற்றங்கள் நடத்தப்படும் ஒரேயொரு களமாகவும் இளங்கலைஞர் மன்றம் திகழ்ந்தது.

திருநெல்வேலி சிவன் - அம்மன் கோயிலை மையப்படுத்தி இயங்கிய "மும்மூர்த்திகள் இசைமன்றம்", "யாழ்ப்பாணம் நடனப் பாடசாலை", "திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக் கலாமன்றம்", "திருநெல்வேலி கலைக்கோயில்", "யாழ் கலாஷேத்ரா", "ஆரியகுளம் நடன மன்றம்", "திருநெல்வேலி பாரதி கலாமன்றம்", "வடமராட்சி நடன மன்றம்", "வடமராட்சி அரங்க கலாசாலை", "குரு ஷேத்ரம் நடனாலயம்", "ஞான சம்பந்தர் கலாமன்றம்", "தென்மராட்சி நாட்டிய கலாமன்றம்", "சிவசக்தி நர்த்தனாலயம்", "திலக நர்த்தனாலயம்" முதலான நிறுவனங்களில் பரத நாட்டியம் கற்பிக்கப்பட்டு வந்ததோடு கலை நிகழ்ச்சிகளிலும் ஆடல் அரங்கேற்றப்பட்டது.

மேலும் மானிப்பாய் கலைக்கோயில், நாட்டியாலயா, உரும்பிராய் கலைக்கோயில் முதலான நிறுவனங்களுடன் தமிழகத்திற்குச் சென்று பரதக்கலை கற்றுத் திரும்பிய தனி நபர்களும் பரதக்கலையைக் கற்பித்தனர். 1972 ஆம் ஆண்டு இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் பரதநாட்டியம் இணைக்கப்பட்டது. தனியார் நிறுவனங்களில் பணம் செலுத்திக் கற்றுக் கொள்ள முடியாத மாணவர்கள் இக் கலையைப் பயில்வதற்கு இது வரப்பிரசாதமாயிற்று. காலப்போக்கில் பொதுப்பரீட்சைகள், பரத ஆடல் பாடசாலை மட்ட போட்டிகள் ஆற்றுகைகள் என்பன இக்கலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. இலங்கையில் 1931 ஆம் ஆண்டிலிருந்து கலைப்பணி ஆற்றிவரும் வட இலங்கைச் சங்கீதசபை 1982 ஆம் ஆண்டிலிருந்து பரத நாட்டியத்தை ஒரு பாடமாக இணைத்து பரீட்சைகளை நடத்த ஆரம்பித்தது இந் நிறுவனம் தரம் 1 - தரம் 6 வரை பரீட்சைகளை நடத்திவருகிறது. துரம் ஆறில் (ஆசிரியர் தரம்) சிறப்புச் சித்தியடைவோருக்கு "பரதகலாவித்தகர்" என்ற பட்டமும் வழங்கப்பட்டுவருகிறது. இந்தப் பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத் தேர்வு நாடிகள் 45 நிமிட அவைக் காற்றுகை ஒன்றினை நிறைவு செய்ய வேண்டும். இது ஒரு சிறிய அரங்கேற்றமே. வட இலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தரத் தேர்வில் உள்ளடங்கும் நட்டுவாங்கத்தேர்வு, வாய்ப்பாட்டுத் தேர்வு (உபபாடம்), பரத நாட்டியக்கலை சம்பந்தமாக எழுதப்படும் ஆய்வுக்கட்டுரை, கற்பித்தல் முறை, செய்முறை, அறிமுறை உப பாடம் - சங்கீதம் என்பன இக்கலையின் பூரண கற்றலுக்கு உதவுகின்றன. வருடந்தோறும் நடைபெறும் இந்த ஆசிரியர் தரப்பரீட்சையில் ஏறத்தாழ 35 மாணவர்கள் வரை தோற்றித் தமது கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வருவது இலங்கையின் பிறிதொரு வளர்ச்சிப்படி.

அடுத்து இராமநாதன் நுண்கலைக் கழகம் என்ற நிறுவனம் 1960 முதல் ,யங்கி வந்தாலும் 1972 முதல் பரதநாட்டியக் கற்கை நெறி இணைக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இந்நிறுவனத்தைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடன் இணைத்துக் கொண்டது. வட இலங்கைச் சங்கீத சபை நடத்தும் சங்கீத பாடப்பரீட்சையில் தரம் 4 இல் சித்தியடைந்த மாணவர்கள் நேர்முகத் தேர்வின் போது நடத்தப்படும் பரத ஆடல் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற்றால் அவர்கள் நடனக் கற்கை நெறியைக் கற்பதற்கு அனுமதிக்கப் பட்டார்கள். பிற்காலத்தில் 1983 ஆண்டிலிருந்து வட இலங்கைச் சங்கீத சபை தரம் நான்கு பரீட்சையை பரத நாட்டியத்தில் நடத்த ஆரம்பித்தது. பின் தரம் நான்கு பரத நாட்டியப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், க.பொ.த (உ/த) பரதநாட்டியம் சித்தியடைந்த மாணவர்கள் இந்நிறுவனத்தில் இணைக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் பரத நாட்டிய கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் போது "நாட்டியக் கலைமணி" பட்டம் பெற்றுக் கொண்டு ஆசிரிய நியமனங்களை எடுத்துக் கொள்ளமுடிந்தது. 2000 ஆம் ஆண்டு முதல் இக்கற்கை நெறியில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு "நுன்கலைமாணி - நடனம்" என்ற பட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

அத்துடன் பரதக் கலை கற்றலுக்கு மேலும் வளம் சேர்ப்பதற்காக இக்கலை பற்றிய ஆய்வுக்கட்டுரை ஒன்றையும் மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நியதியும் உண்டு. காலத்தின் தேவைக்கேற்ற தொழினுட்பம், ஆங்கிலம முதலான பாடங்களுடன் நட்டு வாங்கம், அவைக்காற்றுகை என்பன கற்கை நெறியின் இறுதிப் பரீட்சைக்குரிய கூறுகளாக இணைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக விளங்கும் இந் நிறுவனம் 2022 ஆம் ஆண்டு முதல் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக்கலைகள் பீடம் என்ற பெயர் மாற்றத்துடன் தனிப்பீடமாகி பரத நாட்டியக் கலை வளர்ச்சியில் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. துரதிஷ்ட வசமாக இந்நிறுவனத்தில் கற்று வெளியேறும் பட்டதாரிகளுக்கு அண்மைக் காலங்களில் ஆசிரிய நியமனம் வழங்கப்படுவதில்லை. ஆயினும் நுண்கலை மாணி - பரதநாட்டியம் பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்கள் தனியார் வகுப்புகளை நடத்தி வருவது அவர்கள் கற்ற இக் கலை வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பெரும்பங்கு எனலாம்.

யாழ்ப்பாணத்தில் ஆசிரிய நியமணம் பெற்றவர்களைக் கற்பித்தல் பயிற்சி வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட நூற்றாண்டைக் கடந்து நிமிர்ந்து நிற்கும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 1958 ஆம் ஆண்டு முதல் அழகியல் செயற்பாடுகளுக்காக பரத நடனத்துறை சார்ந்த விரிவுரையாளர்களை அழைத்துக் கொண்டது. காலப்போக்கில் 1972 ஆம் ஆண்டு முதல் நடன ஆசிரிய நியமனம் பெற்றவர்களைப் பயிற்றுவிப்பதற்காக ஆடற்கலைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிக்குரிய விசேட பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை அரசினால் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்ட நடன ஆசிரியர்கள் தமது கற்பித்தலை வளப்படுத்திக் கொள்ள இந்நிறுவனத்தில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றனர். இவர்களது பயிற்சிக் காலத்தில் நிறுவனத்தில் இடம் பெற்ற போட்டிகள், ஆற்றுகைகள், பரீட்சைகள், கற்பித்தல் பயிற்சிகள் பரத ஆடலின் வளர்ச்சிக்குப் பெருமளவில் உதவின. காலப் போக்கில் பரத ஆடலின் விசேட பயிற்சி நெறி தடைப்பட்டுவிட்டது.

2000 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உருவான தேசிய கல்வியியற் கல்லூரி க.பொ.த (உ/த) பரீட்சையில் நடன பாடத்தில் சித்தியடைந்த மாணவர்களை "இசற் புள்ளி" அடிப்படையில் கற்பித்தலுக்குத் தயார்ப்படுத்தும் ஆசிரிய பயிற்சிக்காக உள்வாங்க ஆரம்பித்தது. இந்நிறுவனத்திலும் பரத ஆடற் கலையின் செய்முறை, அறிமுறை, கற்பித்தல் முறை ஆகிய கூறுகள் கற்கைநெறியில் இணைக்கப்பட்டன. இந்நிறுவனத்தில் இரண்டு வருடங்கள் பயிற்சி பெற்ற மாணர்கள் மூன்றாம் வருடம் பாடசாலை ஒன்றில் முழுமையான கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடுவர். கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் இவர்கள் பாடசாலைகளில் இணைந்து பரத ஆடலைக் கற்பித்துவருவதன் மூலம் இக்கலை வளர்ச்சிக்கு உதவி வருகின்றனர்.

மேலும், யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் பரத நாட்டியத்தைத் தன் அழகியற் கல்லூரியில் பயிற்றுவித்து மாணவர்களை நடன பரீட்சை களுக்கும், ஆற்றுகைகளுக்கும், போட்டிகளுக்கும் தயார்ப்படுத்தி வருகின்றது. அத்துடன் பிரதேச செயலககங்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கலாசார மத்திய நிலையங்கள் பரத ஆடலை அப்பிரதேச ஆடற்கலைஞர்களின் உதவியுடன் பயிற்றுவிக்கின்றன. தொலைக்காட்சி நடன நிகழ்ச்சிகள், கல்வி அமைச்சு, இந்து சமய கலாசார அமைச்சு, தேசிய இளைஞர் சேவை மன்றம், மற்றும் சில தனியார் நிறுவனங்கள் என்பன நடத்தி வரும் பரத ஆடல் போட்டிகள் மூலமும் யாழ்ப்பாண மண்ணில் இக்கலை ஆழ வேரூன்றி வருகிறது.

யாழ்ப்பாண மண்ணிலுள்ள இந்து ஆலயங்களில் இருந்த மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட, பரத நடனம் சார்பான ஓவியங்கள், சிற்பங்கள் இக்கலையின் சிறப்பை வெளிப்படுத்தி இக்கலை மீது மக்களிடையே ஈர்ப்பை ஏற்படுத்துவதும் இக்கலை வளர்ச்சிப் போக்கில் குறிப்பிடத்தக்க ஒன்று. இவற்றுடன் பரத நாட்டியத்தைக் கற்றுக் கொள்ளாவிடினும் அக்கலை பற்றிய ஆர்வம், விருப்புக் காரணமாக அக்கலை பற்றி ஆய்ந்தறிந்து பரத நாட்டியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமான நூல்களை எழுதிய பேராசிரியர் வி.சிவசாமி, பேராசிரியர் சபா.ஜெயராசா ஆகியோர் யாழ்ப்பாணத்தில் இக்கலை வளர்ச்சிக்கு பிறிதொரு வழியில் உதவியுள்ளனர்.

பரத நாட்டியத்தைக் கற்றுத் தேர்ச்சிபெற்ற மாணவர்கள் சிலர் அரங்கேற்றத்தைக் காண விழைந்தாலும் கலை நிகழ்ச்சிகளை ஆற்றுகை செய்ய முன்வந்தாலும் அவர்களுக்கு உதவிகள் தேவைப்படும் போது நிறைவேற்றக் கை கொடுக்கும் தனியார் அமைப்புக்கள், தனிப்பட்ட நபர்கள் கடந்த காலங்களில் பரத நாட்டியக் கலை வளர்ச்சியில் தம் பங்களிப்புகளை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண வரலாற்றில் பரத நாட்டிய கலை 50 களில் தடம் பதிக்க ஆரம்பித்தது முதல் தனியார் கற்பித்தல், தனியார் நிறுவனங்களின் கற்பித்தல், பாடசாலைகள், பல்கலைக்கழகம், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்வியியல் கல்லூரி, கலாசார மத்திய நிலையங்கள் முதலியவற்றினூடாக இன்று பெரு வளர்ச்சி கண்டுள்ளது.


உசாத்துணை நூல்கள் :-

1) பரதக்கலை - பேராசிரியர் வி.சிவசாமி
2) ஆடல் அழகியல் - பேராசிரியர் சபா.ஜெயராசா
3) அழகியற்கல்வி அறிமுகம் - கலைஞர் வேல் ஆனந்தன்
4) காலந்தோறும் நாட்டியக்கலை - திருமதி.கார்த்திகா கனேசர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2024 தைப்பூச நன்நாள் முகப்பு மண்டப அடிக்கல் நாட்டு வைபவமும் கலா மண்டப புனரமைப்பு வேலைகள் ஆரம்பமும்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலயங்களில் மங்கல இசையில் மல்லாரிகளின் வகிபங்கு

**செல்வி ப. கணேசகம்பர்.**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தலைவர்,
இசைத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.
parameswary1968@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஆலயங்களில் இறைவனை வழிபடும் பொருட்டு கிரியைகளிலும், பூசைகளிலும் இசைக்கருவிகளை இசைத்து வழிபாடு செய்யும் முறை காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. இதற்கு சரித்திரங்களே ஆதாரமாக விளங்குகின்றன. இசைக் கலையை ஆலயங்களில் புகுத்த வேண்டியதன் நோக்கமே இறைவன் இசை வடிவானவன், ஒலி வடிவானவன் என்ற உயர்ந்த எண்ணக்கருக்கள் மக்கள் மனதில் வேரூன்றி இருந்தன. நடராஜர், கண்ணன், நந்தி, சரஸ்வதி போன்ற தெய்வங்கள் இசைக்கருவிகளைத் தமது கையில் ஏந்தியிருப்பதை காண்கின்றோம். இதிலிருந்து இந்துக்கள் இறைவனையும் இசையையும் சம்பந்தப்படுத்தியே வழிபாடு செய்து வருகின்றனர் என்பதைக் கான்கின்றோம். அந்தவகையில் பண்டைக் காலம் முதல் இன்றுவரை மங்கல இசை ஆலயங்களில் இன்றியமையாத ஓர் இடத்தைப் பெற்றிருக்கின்றது. தவில், நாதஸ்வரம் ஆகிய இரு இசைக்கருவிகளிலும் ஆலயத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த கருவிகளாக இடம்பெறுவதைக் காணக்கூடியதாய் உள்ளது. நாதஸ்வரத்தில் மட்டுமே மல்லாரி, ரக்தி, ஊஞ்சல், எச்சரிக்கை போன்றவை கிரியைகளில் இசைக்கப்படுகின்றன. காலை முதல் பள்ளியறை செல்லும் வரை பூசை வழிபாட்டில் நாதஸ்வரம் தவிர்க்க முடியாத ஓர் இசைக் கருவியாக விளங்குகிறது. சாமி புறப்பாட்டின் போது இசைக்கப்படும் ஓர் இசைவடிவம் மல்லாரியாகும். மல்லாரி பல்வேறு வகையான அமைக்கப்பட்டுள்ளது. இந்த மல்லாரிகளின் வகைகளையும் அவை இசைக்கப்படும் சந்தர்ப்பங்களையும் தற்காலத்தில் வெவ்வேறான மல்லாரிகள் வாசிக்கப்படுகின்ற விபரங்களும் இவ்வாய்வில் முன்வைக்கப்படவுள்ளன.

திறவுச் சொற்கள் : நாதஸ்வரம் - மல்லாரி, இசைக்கருவி, வழிபாடு - கிரியைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆய்வின் அறிமுகம்**

நாதஸ்வரம் ஆதிகாலத்தில் கிராமப்புறங்களிடையேயும் ஆதி பழங் குடியினர், பாமரர் என்போரிடத்தில் பெரும் செல்வாக்குப் பெற்று அவர்களின் இன்மைக்கு பெருவிருந்தாக இருந்த வாத்தியமாகும். தென்னகத்தில் ஆலயங்கள் எப்போது அமைக்கப்பட்டனவோ அப்போதிருந்தே சமயச் சடங்கு களிலும், மங்கல விழாக்களிலும், திருமணம் போன்ற நற்காரியங்களிலும் வாசிக்கப்பட்டு வருகின்றது. இதனை விட பொய்க்கால், குதிரையாட்டம், கரகம், நெய்யாண்டிமேளம் ஆகிய கிராமியக் கலைகளிலும் இதனைவிட பல்வேறு வகை ஊர்வலங்களிலும் பிற்காலத்தில் இசையரங்குகளிலும் இசைக்கப்பட்டன. சாஸ்திரீய இசை, மெல்லிசை, மேல்நாட்டிசை ஹிந்துஸ்தானி இசை என எவ்வகையான இசைப்பாணியையும் நாதஸ்வர இசையில் கையாளக் கூடியதாய் உள்ளது. முதன் முதல் நாதஸ்வரம் சிதம்பரத்தில் தான் வாசிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. அங்கேயே ஆலய வழிபாட்டின் போது எந்தெந்த இராகங்களை எப்போது வாசிக்கவேண்டும் என்ற முறை நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இத்தகைய முறையால் மக்கள் அதிகமாக கூடும் ஆலயங்களில் தூரத்திலிருந்தே மக்கள் இப்போது இந்தக் கிரியை தான் நடைபெறுகின்றது என்பதனை ஊகித்து உணர்ந்து கொள்ள முடியும். தற்போதும் இம் மரபுகள் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. திருக்கோயில்களில் ஸ்வாமி வீதியுலா வரப் புறப்படும் போதும் சரியாக குண்டத்தின் முன்பு ஸ்வாமி தரித்து நிற்கும் போதும்சரி வயதுக்கு மூத்த அனுபவம் மிக்க கலைஞர்களை கௌரவித்து அவர்களே வாசிப்பதற்கு முதலிடம் கொடுக்கும் மரபு நாதஸ்வர இசை மரபிலே காணப்படுவதை கூற வேண்டும். யாக பூசையின் போது நன்கு அனுபவமும், திறமையும் பெற்ற மூத்த கலைஞரே ஆலாபனையை முதலில் வாசிக்கத் தொடங்குவார். அவர் தொடங்கிய ஆலாபனையை தொடர்ந்து ஏனைய கலைஞர்கள் ஒவ்வொருவரும் வாசிப்பதை காணலாம். எனவே மரபு ரீதியான இசைப்பாரம்பரியமும் பண்புகளும் நாதஸ்வரக் கலைஞர்களிடையே பேணப்பட்டு வருகின்றமை இந் நிகழ்விலிருந்து அறியக்கூடியதாய் உள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

நாதஸ்வரம் முற்காலத்தில் ஆலயவழிபாட்டை முன்னிட்டே உருவாக்கம் பெற்றது. தற்காலத்தில் ஆலயவழிபாட்டோடு அரங்கிசையிலும் வேறு வைபவங்களிலும் அது வாசிக்கப்பட்டு வருகின்றது. ஆலயங்களில் திருவிழாக்காலங்களில் வழிபாடுகளில் முக்கியமான இடத்தைப் பெறுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதஸ்வரம் தான். இது தொன்றுதொட்டு அனுசரிக்கப்பட்டு வரும் மரபாகும். மல்லாரிகளில் பல வகைகள் உண்டு. தேர் மல்லாரி, தீர்த்த மல்லாரி, தனிகை மல்லாரி, ரக்தி எச்சரிக்கை என்பவை அவை. இவை எல்லா ஆலயங்களிலும் சம்பிரதாய முறைப்படி முற்காலத்தில் வாசிக்கப்பட்டுவந்தன. இவை தற்காலத்தில் சில மல்லாரி வகைகள் மறைந்துபோயின. ஆலயங்களில் எந்தப்பகுதிகளில் என்ன உருப்படி வகை வாசிக்க வேண்டும் என்ற மரபுகள் பின்பற்றப்படாமல் வரும் நிலையை தற்போது காண்கின்றோம். எனவே இந்த மரபுவழி வாசிப்பு முறைகள் சில ஆலயங்களிலேயே பின்பற்றப்பட்டு வருகின்றன. அனைத்து ஆலயங்களிலும் இந்த பழமையான வாசிப்பு முறைகள் பின்பற்றப்பட்டுவரவேண்டும் என்பதனை வலியுறுத்துவது இந்த ஆய்வின் நோக்கமாகும்.

### ஆய்வு மூலங்கள்

ஆய்வின் மூலங்களாக மல்லாரி பற்றி குறிப்பிடப்பட்ட நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தில் எடுக்கப்பட்ட தகவல்கள் நாதஸ்வரக்கலைஞர் களுடனான நேர்காணல் என்பவை அமைந்துள்ளன.

### ஆய்வுப் பிரச்சினை

முப்பத்தைந்து தாளங்களிலும் மல்லாரிகள் அமைந்திருந்தாலும் சில நாதஸ்வரக் கலைஞர்கள் புதிது புதிதாக மல்லாரிகளை அமைத்து வாசிக்கின்றனர். பல தாளங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்ட மல்லாரிகளே மீண்டும் மீண்டும் மரபுவழியாக வாசிக்கப்படு கின்றன. பல மல்லாரிகள் முது கலைஞர்கள் வாசித்தவை. தற்போது வழக்கொழிந்து விட்டன. உடற்கூறு அல்லது ஓடக்கூறு என்பது ஸ்வாமி சுற்றி வந்து வாசலில் நிற்கும் போது வாசிக்கப்படும். பஞ்சபூதங்களிலான இவ் உடம்பைப் பற்றிக் கூறுவதே "உடற்கூறு" இது மருவி ஓடக்கூறு என்றாகிற்று. சிதம்பரத்தில் எட்டாம் திருவிழாவில் உடற்கூறு வாசிக்கும் மரபு காணப்படுகிறது. தற்போது இது வழக்கொழிந்துவிட்டது.

சிதம்பர மரபில் சீர்பெற்ற மங்கல இசை (வீரகேசரி சஞ்சிகை, 1988) ஸ்வாமி வீதியுலா சென்று வந்ததும் ஆலயவாயிலில் தட்டுச் சுற்று எனப்படும் கிரியை இடம்பெறும். தற்காலத்தில் தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் மட்டுமே தட்டுச் சுற்று வாசிக்கும் மரபு காணப்படுகிறது. இக் கிரியையில் மூன்று முறை ஸ்வாமியை வலம்வரல் வேண்டும். ஸ்வாமி திருவீதி வலம் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பிடத்திற்கு செல்லும்போது "எச்சரிக்கை" வாசிக்கப்படல் வேண்டும். மத்யமாவதி அல்லது புன்னாகவராளி இராகத்தில் இது அமைந்திருக்கும். தற்காலத்தில் எச்சரிக்கைக்கு பதிகை வேறு பக்திப் பாடல்கள் வாசிக்கப் படுகின்றது. எனினும் சம்பிரதாய முறை மத்தியமாவதியில் வாசிப்பதேயாகும். இவ்வாறு மரபு ரீதியாக வாசிக்கப்பட வேண்டிய சில உருப்படிகள் அல்லது பாடல்கள் தற்காலத்தில் மாற்றம் பெற்றிருப்பது ஆய்வுப் பிரச்சினையாகும்.

### ஆய்வு முறையியல்

இது ஒரு வரலாற்று ஆய்வாக அமைந்துள்ளது. மரபுவழி வாசிப்பு முறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்ற வினாவிற்கு நேர்காணல் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. எனவே கள ஆய்வாகவும் கருதமுடியும்.

### ஆலயங்களில் மல்லாரி இசையின் வகிபங்கு

ஆதிகாலத்தில் நாதஸ்வரம் வெண்கலம் வெள்ளி தங்கம் முதலிய உலோகங்களை கொண்டு உருவாக்கப்பட்டது. மரத்தினால் கடையப்பட்டு தங்கம் வெள்ளி என்பவற்றால் கவசம் இடப்பட்ட நாதஸ்வரங்களும் பல சிறந்த கலைஞர்களுக்கு சன்மானமாக வழங்கப்பட்டன.

### தமிழிசை தொன்மையும் பெருமையும் திருத்தலங்கள் வளர்த்த இசை

திருநெல்வேலி மாவட்ட ஆழ்வார் திருநகரி கோவிலிலும் தஞ்சாவூர் மாவட்ட கும்ப கோணத்திலுள்ள ஆதிகும்பேசர் ஆலயத்திலும் கருங்கல்லாலான நாதஸ்வரங்கள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இவற்றை எளிதாகவோ நீண்டநேரமோ வாசிக்க இயலாது. மரத்தினால் செய்யப்பட்ட நாதஸ்வரமே வாசிப்பதற்கு ஏற்றதாகும். தற்காலத்தில் மரத்தினால் செய்யப்பட்ட நாதஸ்வரமே எல்லோராலும் வாசிக்கப்பட்டு வருகின்றன. ஆலயங்களில் உற்சவ காலங்களில் நாதஸ்வர இசையில் வாசிக்கப்படும் மிக முக்கியமான பகுதியாக மல்லாரி விளங்குகிறது.

**மல்லாரி என்ற பெயர் வரக்காரணம்** ஆலயங்களில் உற்சவ காலங்களில் பல்லக்கிலோ அல்லது படிச்சட்டத்திலோ அல்லது வேறு வாகனங்களிலோ ஸ்வாமியை வைத்து தூக்குவோருக்கு "மல்லர்" என்ற பெயர் இருந்தது.

### கோயில் இசை மரபில் நாதஸ்வரம்

இவர்கள் ஸ்வாமியை தூக்கும் போது கோஷமிடுவர். இவர்களுக்கு மல்லரி என்ற பெயர் இருந்ததென்றும் இதுவே வழக்கில் திரிந்து மல்லாரி என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவிட்டது என்றும் கூறப்படுகிறது. மயில் ஆரி ஸ்ரீ மயிலாரி என்பது மருவி மல்லாரி என ஆனது. ஆரி என்றால் பாடுதல், ஒலியெழுப்புதல் எனப் பொருள்படும். மயில் கூவுதலை அகவுதல் என்றும் இந்த மயில் அகவுதலும் ஆரியும் சேர்ந்து மயிலாரி மல்லாரி என்று ஆனது.

**மல்லாரி வாசிக்கப்படும் சந்தர்ப்பம்**

மல்லாரி வீரச் சுவை நிறைந்த கம்பீரநாட்டை இராகத்தில் இசைக்கப் படுகின்றது. காலம் காலம் தொட்டு இன்று வரை மல்லாரிகள் கம்பீரநாட்டை இராகத்திலே இசைக்கப்பட்டு வருகின்றன. சாமி புறப்பாட்டின் போது மல்லாரி இசைக்கப்படுவது மரபாகும். சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் பஞ்சசக்தி, பஞ்சஇந்திரியங்கள், பஞ்சபூதங்கள் ஐந்தெழுத்து என்றெல்லாம் ஐந்து என்ற எண்ணோடு பல தொடர்புகளுண்டு. இறைவழிபாடு என்றாலே அங்கு முதன்மைப்படுத்தப்படவேண்டியது ஐந்து என்ற எண்ணிக்கை என்பதால் ஐந்து அட்சரங்கள் கொண்ட கண்டகதி மட்டுமே அமர்த்தி தவிலில் அலாரிப்பு வாசிக்கப்படும். இதனைத் தொடர்ந்தே மல்லாரி நாதஸ்வரத்தில் இசைக்கப்படும். மல்லாரியை தொடர்ந்து கன இராகங்கள் என அழைக்கப்படும் நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீ ஆகிய இராகங்களில் ஸ்வரப் பிரயோகங்கள் வாசித்து மீண்டும் கம்பீரநாட்டை இராகத்திலே இராகத்திலே மல்லாரியை எடுத்து முடிக்க வேண்டும். ஆலயங்களில் உற்சவ காலங்களில் ஆலய வாயிலில் உட்பிரகாரத்தில் இருந்து தெற்கு வீதி வரை மல்லாரியும் தெற்கிலிருந்து தென்மேற்கு வரை இராக ஆலாபனை கீர்த்தனைகளும் வடக்கு வடமேற்கு வீதிகளில் பக்திப் பாடல்கள், தில்லானாக்கள் வாசிக்கப்படும். வெளிவீதியில் வாயிலில் இருந்து இராக ஆலாபனையும் வடக்கு திசையில் இருந்து தென்கிழக்கு திசை திசையில் இருந்து தென்கிழக்கு திசை வரை மல்லாரியும் அதன்பின் தென்மேற்கு திசையில் இராக ஆலாபனையும் கீர்த்தனை நடைகள் கற்பனை விடயங்கள் என விரிவுப்படுத்தி நாதஸ்வரம் இசைக்கப்படும். பெரிய வீதியாக இருப்பின் பல்லவி வாசிக்கும் மரபும் காணப்படுகிறது. வடமேற்குத் திசை வந்தவுடன் மீண்டும் பக்தி பாடல்கள், துணை உருப்படிகள், பதம், தில்லானா என்பவை இசைக்கப்படும். இவையே தற்காலம் வரை பேணப்பட்டு வரும் மரபாக அமைந்துள்ளது.

**மல்லாரியின் வகைகள்**

மல்லாரியை கம்பீரநாட்டை இராகத்தில் பல்வேறு தாளங்களிலும் குறிப்பாக முப்பத்தைந்து தாளங்களில் ஏதாவதொன்றில் தமது கற்பனைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்ப ஜதிக்கோர்வைகளை அமைத்து அதனை ஸ்வர அமைப்பில் தயார்படுத்தி கலைஞர்கள் இசைப்பர். மல்லாரிக்கு சாகித்தியமும் அமைக்கப் பட்டுள்ளது. நாட்டிய நிகழ்வுகளில் மல்லாரியை சாகித்தியமாக பாடும் முறையும் காணப்படுகிறது. பெரும்பாலான மல்லாரிகள் ஸ்வர அமைப்பு மட்டுமே அமைந்து காணப்படுகின்றன. மல்லாரி வகைகள் சின்ன மல்லாரி, பெரிய மல்லாரி, தளிகை மல்லாரி, தேர் மல்லாரி, தீர்த்த மல்லாரி எனப் பல வகைப்படும். இவற்றை விரிவாக நோக்குவோம்.

### தேர் மல்லாரி

ஸ்வாமி இருப்பிடத்தை விட்டு எழுந்தருளுவது தொடக்கம் உள் வீதி ஆரோகணிக்கும் வரையில் இசைக்கப்படுவது தேர் மல்லாரி ஆகும். இது சதுஸ்ர திரிபுடை தாளத்தில் கண்ட கதியில் அமைந்திருக்கும். ஒன்பதாம் நாள் தொண்டர்கள் தேரின் வடம் பிடித்து இழுக்கும் போது அவர்களை உற்சாகப்படுத்தும் நிலையில் தேர் மல்லாரி வாசிக்கப்படும்.

### தீர்த்த மல்லாரி

கும்பாபிசேகத்திற்காக யாகசாலையிலிருந்து தீர்த்தம் நிரம்பிய குடங்களை எடுத்து வரும் போது வாசிக்க வேண்டிய மல்லாரி தீர்த்த மல்லாரி ஆகும். இதனை கும்ப மல்லாரி எனவும் கூறுவர். இது விறு விறுப்பான கால நடையில் அமைந்திருக்கும். இறைவனின் நீராடலுக்கு திருமஞ்சன நீர் கொண்டு வரும் போது தீர்த்த மல்லாரி இசைக்கப்படும்.

### தளிகை மல்லாரி

ஸ்வாமிக்கு நைவேத்தியம் எடுத்துவரும் போது அதற்கு மரியாதை செய்யும் முகமாக தளிகை மல்லாரி வாசிக்கப்படும். இது தற்காலத்தில் எல்லா ஆலயங்களிலும் இசைக்கப்படுவது குறைந்து வருகிறது.

### பெரிய மல்லாரி

எண்ணிக்கையில் கூடிய அங்க ஆவர்த்தனங்கள் கொண்ட தாளங்களில் அமைந்துள்ள மல்லாரிகள் பெரிய மல்லாரிகள் என கூறப்படும். சங்கீர்ண திரிபுடைதாளம், சங்கீர்ண அடதாளம், சங்கீர்ண ஜம்பை, சங்கீர்ண மட்டியம் போன்ற தாளங்களின் மத்திமம் எண்ணிக்கையில் பாடியவை. இவற்றில் அமைந்த மல்லாரிகளை விளம்பிதம், துரிதம், திஸ்ரம் ஆகிய முறைகளில் வாசிக்கும் போது நீண்ட நேரம் எடுக்கும். எனவே இவை பெரிய மல்லாரி என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படும். சிவாலயங்களில் இறைவன் இடப வாகனத்தில் பஞ்ச மூர்த்திகளும் எழுந்தருளும் போது பெரிய மல்லாரி இசைக்கப்படும்.

ஆலயத்தில் பெருந் திருவிழாவின் இறுதி நாளன்று மல்லாரி இசைப்பதில்லை. இறைவன் வீதியுலா முடிந்ததும் அலங்காரம் களைந்து பள்ளியறைக்கு செல்லும் போது ஊஞ்சல் பாட்டு இசைக்கப்படும். இது முடிந்ததும் கதவு தாளிடப்படும். இதன்பின் மல்லாரியை கொஞ்சநேரம் இசைத்தல் வேண்டும். இம் முறைகள் பாரம்பரியமாக மங்கல இசைக் கலைஞர்கள் தமது சிஷ்யர்களுக்கு கற்பிக்க வழிவழியாக பேணப்பட்டு வருகின்றன.

### சின்ன மல்லாரி

முப்பத்தைந்து தாளங்களுள் எண்ணிக்கையில் குறைந்த தாளங்களில் இயற்றப்பட்ட மல்லாரிகள் சின்ன மல்லாரிகள் என அழைக்கப்படும். வளர்ந்து வரும் கலைஞர்கள், ஆலயங்கள் சின்ன மல்லாரிகளையே பெரும்பாலும் உள்வீதிகளில் இசைப்பது வழக்கம். ஆலயங்களில் இறைவன் வீதியுலா வரும் போது சின்ன மல்லாரி இசைக்கப்படும்.

### ரக்தி

ரக்தி என்பதும் மல்லாரியின் ஓர் வகையாகும். தேர் திருவிழாவில் தெற்கு கோபுரத்தை ஸ்வாமி அண்டியதும் ரக்தி வாசிக்கப்படும். இது கணித நுட்பங்கள் வாய்ந்தது. இதனை ரக்தி மேளம் என்றும் கூறுவர். ரக்தி எனும் வடமொழிச்சொல்லுக்கு அழகுஇ சுவை எனப் பொருள் கூறப்படுகிறது. ரக்திக்கு முன்பாக இராக ஆலாபனை செய்யப்படும் கன இராகங்களும் இ ஜன ரஞ்சகமான இராகங்களும் ரக்தி வாசிக்க முன்பு இசைக்கப்படும். பைரவிஇ காம்போதி சண்முகப்ரியா கீரவாணி சாவேரி ஸிம்கேந்திரமத்திமம் தோடி நாட்டைக்குறிஞ்சி என்பவை "ரக்தி" வாசிப்பதற்கு ஏற்ற இராகங்கள் நாதஸ்வர கலைஞர்களுக்கு லயத்தில் நிர்ணயம் இருந்தால் தான் ரக்தி வாசிக்க முடியும். ரக்தி சிறிய பல்லவியைப் போல் அமைந்திருக்கும்.

### முடிவுரை

ஆலயங்களிலே மல்லாரி என்பது மரபு வழியாக ஸ்வாமி புறப்பாட்டின் போதும் பள்ளியறை செல்லும் போதும் முக்கியமான கிரியை முறைகளில் பொருத்தப்பாடன மல்லாரிகள் இசைக்கப்படுவது பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது. இம் முறைகள் பழமை மாறாமல் புதிய ஆக்கங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஆலயங்களிலும் பின்பற்றப்பட வேண்டும். இதன் மூலம் எமது நாதஸ்வர இசைப் பாரம்பரியம் சிறப்புடன் பேணப்படும் என்பது கண்கூடு.

### உசாத்துணை நூல்கள்


1. சுந்தரம் பி.எம் 1990 ஆலயவழிபாட்டில் இசை - மறுதோன்றி அச்சனம் தமிழ்ப்பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்.
2. சண்முகசுந்தரம்.த, 1982 - யாழ்ப்பாணத்து இசை வேளாளர் அருள் வெளியீட்டகம் - தெல்லிப்பழை.
3. சிவானந்தராஜ, அஸ்.2007 - கரலமுகங்கள் ஓர் அறிமுகம் சுதா கிராபிக்ஸ் - சித்தன்கேணி.
4. பக்கிரிசாமிபாரதி கே.ஏ 2004- திருக்கோயில் நுண்கலைகள் குசேலர் பதிப்பகம் - சென்னை.
5. ராஜீ, மா.2012 - தென்னிந்திய மரபு இசையியல் - பாகம் 01, பரணி பதிப்பகம் - சென்னை.
6. சிதம்பரமரபியல் சீர்பெற்ற மங்கல இசை சஞ்சிகை - வீரகேசரி வார வெளியீடு - 1988


### நேர் காணல்

குமாரதாஸ் நாகதீபன் - நாதஸ்வரக் கலைஞர் - தாவடி

இராமமூர்த்தி சிவகுமார் - நாதஸ்வரக் கலைஞர் - வழக்கம்பரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது பண்ணிசைப் பயணம்

**Dr. N.V.M. Navaratnam**
M.Phil (SL) PhD (India), C. Telugu, C. Eng (India)
(Hon. Professor Music) Former Head,
Ramanathan Academy of Fine Arts,
University of Jaffna, Sri Lanka.
Jaffna.

வேத இதிகாச புராண மற்றும் பின்வந்த வரலாறுகளைத் தொடர்ந்த சங்க இலக்கிய வரலாறுகளும், பக்திகால இலக்கிய வரலாறுகளும், அதனுள் கி. பி / கி. மு வரலாறு சாதனங்களும், அவற்றின் உட்கிடைகளும் ஈழத்தின் இசைவரலாற்றின் மிகப்பெரும் தடயங்களைக் கொண்டு விளங்குகின்றன. ஈழத்தின் புராதன இசைவளர்ச்சி தொல்காப்பியத்துக்கு முன் காணப்படுவது. இது பற்றி பரிபாடல் வரிகளுள் பெரிதும் பாவடிவம் பண் வடிவம் கூறப்படுகின்றது. நாகர், இயக்கர் காலப் பண்பாட்டில் இயக்கர் தலைவராக இராவணனும், நாகர் தலைவியாக மண்டோதரியும் ஆயிரதந்தி, பதினான்கு தந்தி யாழ் வல்லவர்களாக போற்றப்படுவதும் காண்க.

-டாக்டர் நா.வி. மு. நவரத்தினம்

இராமாயண காலத்தில் இலங்கை முழுவதும் ஆங்காங்கு யாழின் இசை கேட்டதாக அக் காப்பியம் சுட்டுவதும், அகத்தியர் இராவண சிவபூமி எனவும், திருமூலர் சிவபூமி எனச் சுட்டுவதும் மேல் நிற்க. அத்தீசன் ஈழத்தில் முல்லைப்பண் தளம் பற்றிய சிற்றாய்வு (வ.இ.ச. சபை பொன்மலர்) டாக்டர். நா. வி. மு. நவரத்தினம் என்ன மேல்நிற்க.

நாயன்மார்கள் பண்கள் பாடல்கள் ஈழத்தில் சோழர்கால பன்னிரு ஈச்சரங்களும், தேவார நாயக்கர் மற்றும் ஆடல் நங்கையர் குடிகளும் பெருக்கமாக நிற்பது வரலாற்றால் காண்போம்.

19ஆம் நூற்றாண்டில் குறிப்பாக 1970களில் ஐந்து முக்கிய நிகழ்வுகள் ஈழத்தில் பண்ணிசை வளர்ச்சியில் குறிப்பிடலாம்.

1. கொழும்பு விவேகானந்த சபை, இலங்கை இந்துமாமன்றம், திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் பண்ணிசை நடவடிக்கைகள்.
2. நல்லை ஆதீன பண்ணிசைப் பயிற்சிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கல்வி அமைச்சின் சமய நூல்கள் வழிநடவடிக்கைகள், / தேசிய நிலை பண்ணிசை மாணவர்கள்.
4. யாழ் பல்கலைக்கழக இராமநாதன் இசைக் கல்லூரியிலும் மற்றும் நுண்கலைப் பீடத்தில் பண்ணிசை பயில்தலும்.
5. வட இலங்கை சங்கீத சபையில் "பண்ணிசை" ஆசிரியர் தரம் சான்றுப் பரீட்சைகள் பற்றியதும்.

ஸ்ரீலஸ்ரீஆறுமுக நாவலர், சேர். பொன். இராமநாதன், அவர் மருகர் மற்றும் காசிவாசி செந்திநாதையர், தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதமணி, நல்லைக் குருமணிகள் இவற்றை உள்ளிட்ட சைவபரிபாலனசபையின் செயற்பாடுகள், நாவலர் சபை செயற்பாடுகள், தனிநபர் செயற்பாடுகள் இன்னும் இராமநாதன் இசைக்கல்லூரி செயற்பாடும் அடங்கும்.

இலங்கை இந்து மாமன்று சென்னை ஓதுவார் மூர்த்திகள் PAS. இராஜசேகரன் என்பவரை 1970ல் இங்கு அழைத்து மூன்று ஆண்டுகட்கு மேல் இங்குள்ள மாணவர்க்கு பண்ணிசை பயிற்சி தந்துள்ளது. இந்த வகையில் பயின்ற மாணவர்களில் V.T.V. சுப்பிரமணியம், வி. சிவஞானசேகரம், உரும்பிராய் மாணிக்கம் தங்கராசா, அரியாலை கிருஷ்ணவேணி மயில்வாகனம், திருமதி தங்கராசா போன்றவர்கள் சிறந்த அவைக் கலைஞர்களாக வளர்ந்துள்ளனர்.

பண்ணிசைப்புலவர் அறிஞர் கொக்குவில் குமாரசாமிப்புலவர் வழிவந்த தாவடியூர் இராசையா என்ற பண்ணிசை அறிவர்வழி அவர் மகனார் S. R. திருஞானசம்பந்தன் அவர்கள் இத்துறையில் சிறந்து விளங்கி உள்ளார்கள்.

பண்ணாகம் S. K. சிவபாலன் சிறந்த பண்ணிசை ஆற்றுகை மற்றும் ஆய்வு கலைஞராக விளங்கி உள்ளார்கள். இவர்கள் அண்ணாமலை பல்கலைக்கழக்தின் பண்ணிசை தவிசு பேராசிரியர் ஆகப் பணி ஆற்றியவர். இவர்கள் ஆரம்பத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன பண்ணிசைப் பயிற்சியில் பல மாணவர்களை உருவாக்கி உள்ளார்கள். நல்லை ஆதீனத்தின் உதவியுடன் இங்கு பயின்ற தில்லைமணி தருமை ஆதீனத்தில் மீண்டும் பல ஆண்டுகள் பயின்று தேவார இசைமணிப் பட்டம் பெற்றுள்ளார்கள். நல்லை குருமணிகள் சிறந்த இசை வித்தகர். அவர்கள் பணியில் ஆதீனம் சிறந்து விளங்கியது.

பண்ணிசை வித்தகர் காசிவாசி செந்திநாதையர் வழிவந்த குப்பிழான் செல்லத்துரை அவர்கள் தமிழ்நாட்டில் மிக்க புகழ் பெற்று இருந்தார். இவர் மாணாக்கரிடம் பயின்ற பல மாணவிகள் குறிப்பாக சந்திரிகா கணேஸ்பரன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாமளா கணேசுபரன், யசோதா செல்வராசா, சண்முகப்பிரியா சோமசுந்தரம் இவர்கள் நம் சங்கீதசபை ஆசிரிய தரம் வரை வளர்ச்சி அடைந்தார்கள். மற்றும் கல்வி அமைச்சின் தேசிய போட்டிகளில் பண்ணிசை வருவதற்கு முன் சமய நூல்கள், பாடவிதானங்களில் திருமுறைகளும், பதிகங்களும் குறிப்பாக ஈழத்து பாடல்பெற்ற தலங்களும் மாணவர்க்கு பண்ணிசை பற்றிய எண்ணக் கருவை உருவாக்கிட உதவின. இது (இத்துறைசார்) மிகப்பெரும் வெற்றியின் திறவுகோல்.

இந்து மாமன்றம் விவேகானந்தசபை, திருக்கேதீச்சர திருப்பணிச்சபை இணைந்து இலங்கையில் இருந்து தமிழ்நாட்டின் பிரபல ஆதீனத்தில் பண்ணிசை பயில நயினை மு.நவரத்தினம், வி.சிவஞானசேகரம் ஆகியவர்களை அனுப்பி வைத்தது. இவர்கள் மிகச்சிறந்த பயிற்சிகளை திருப்பனந்தாள் ஆதீனத்திலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து இசைத்துறையிலும், எட்டு ஆண்டுகள் திருமுறைப் பேராசான் திருநாரையூர் ஆ. சுப்பிரமணிய முதலியாரிடமும் மற்றும் புகழ்மிக்க இசை அறிஞர்களிடம் பல்கலைக் கழகத்தில் பெற்று இலங்கை திரும்பினார். இவர்கள் பணி வரைவு செய்யப்பட்டது. ஆனால் குறித்த நிறுவனம் இவர்கள் பயின்று வந்த பின்னர் இவர்கட்குரிய வரைபுகள் தரப்படவில்லை. அதில் நான் அரச பணியாளராகவும், ப.சிவஞானசேகரம் பரியோவான் கல்லூரியிலும் பணி புரிந்தோம். கல்வி திணைக்களம் நம் திறமைகள் கண்டு சிறந்த பல உதவிகளை ஆற்றினர். அதில் சுமார் 30 வடக்கு மாகாணக் கல்லூரிகளில் பண்ணிசை பற்றிய கருத்தரங்க விரிவுரைகளை நான் தனியாக நடாத்த ஏற்பாடு செய்தது.

இவை 1979-1980ஆம் ஆண்டுகளில் மிக சிறப்பாக மக்களால் வரவேற்கப்பட்டது. இதன் பொறுப்பு வளவாளராக S.C.S. சிதம்பரநாதன் பணி புரிந்தார்.

1981இல் வட இலங்கை சங்கீதசபைத் தலைவராக இருந்த வடமாநிலக் கல்வியதிபதி கரவை சிவமணி சிவநாதன் என்பவர் எனது ஆற்றுகையை வியந்து அதுபற்றி சங்கீத சபையுள் இந்தப் பாடம் கட்டாயம் இடம்பெற உடன் நடவடிக்கை எடுத்தார். அவர்க்கு துணைநின்ற துணைப்பணிப்பாளர்கள் சிமியாம்பிள்ளை செல்வி பெரியதம்பி, மஃறுப் போன்றவர்களும் பின்வந்த இணுவை இரா. சுந்தரலிங்கம் மாநிலக் கல்வி அதிபதி அருந்துணை புரிந்தார்கள். இதைக் கேள்வியுற்ற முன்னாள் மாநிலக் கல்வி அதிபதி மாணிக்கவாசகர் இந்த துறைக்கு முழு ஆதரவும் தந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத சபையின் பண்ணிசைப்பாட விதான அமைப்பு குழுவில் என்னைத் தலைவராகவும், S.R. திருஞானசம்பந்தரைச் செயலாளராகவும், திரு. V.T.V. சுப்பிரமணியம், வி. சிவஞானசேகரம், தில்லைமணி ஆகியவர்களை உறுப்பினர்களாகவும் 1981ல் நியமித்தனர். அவர்கள் வேண்டுதற்படி நிபுணத்துவ முறையில் செயன்முறை அறிமுறைகட்கு புதிய பாடவிதானம் 1980ல் அமைக்கப்பட்டு 1981 முதல் தரம் ஒன்று முதல் தரம் ஆறு வரை ஆசிரிய தர பயில்வு பரீட்சைகளை நான் 1996 வரை பொறுப்பேற்று நடாத்தி வந்துள்ளேன்.

➢ இந்த பாடவிதானம் இன்று உலகம் முழுவதும் உள்ள தமிழ்மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு கடந்த 45 ஆண்டிற்கு மேல் நடைமுறையில் உள்ளது.

1982 அரசு ஆசிரிய கலாசாலையில் இத்துறையைப் பயிற்ற திருமதி. ஆனந்த குமாரசாமி B.A. (Lond) அவர்கள் என்னைப் பணித்தார்கள். நான் ஆசிரிய மாணவராக அன்று இருந்தேன்.

இலங்கை இந்து கலாசார அமைச்சு 1986, 1987, 1990களில் நாடளாவிய பண்ணிசைக் கருத்தரங்கை என்னை வளவாளராக இருந்து நடாத்த பெரிதும் உதவியது.

இலங்கை தேசிய போட்டிகளில் இசை மற்றும் பண்ணிசையிலும் ஆரம்ப, மத்ய, மேல், அதிமேல் பிரிவுகளில் 1981 முதல் தங்கப்பதக்கம் வழங்கும் போட்டியாக அனைத்து இலங்கைப் பாடசாலைகளிலும் நடாத்தப்படுவது பண்ணிசை வளர்ச்சிக்கு பெரும் பெரும் துணை தருகின்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேவார இசைப் பயிற்சியை வார நாள்களில் 1981 முதல் 1986 வரை நடாத்திட என்னை நியமித்தது. அப்பயிற்சி காரணமாக பல மாணவர்களும், மக்களும் இத்துறையின் மேன்மைகளை அறிய பெரிய வாய்ப்பு கிடைத்தது. இலங்கையில் உள்ள சுமார் 51 சிவாலயங்களில் வடக்கு, கிழக்கு, மேற்கு மத்திய மாகாணங்களில் பண்ணிசை அரங்க நிகழ்ச்சி களை நாம் நடாத்த 1981 முதல் 19 வருடங்கள் 2000 ஆண்டு வரை சமூகம் சமய வாதிகள், ஆன்மீக பெரியார்களைக் காண கேட்க சிந்திக்க வைத்தது.

துறைசார்பான பல ஆய்வுரைகள் செய்தேன், இலங்கையில் 1970ன் பின் 2016 வரை பண்ணிசை வளர்ச்சியில் மிகப்பெரும் சாதனை இதுவாகும். விவேகானந்தர் நூற்றாண்டு விழாவில் இராமகிருஷ்ண மண்டபத்தில் இந்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவிவகார அமைச்சர் யஸ்வன்சிங்க தலைமையில் மிக சிறந்த கருத்தரங்குச் செயல் அமர்வும் அமைச்சரை உளம் நெகிழ வைத்தது. இராமகிருஷ்ண அமைப்புத் தலைவர் ஆத்மகானந்தாஜீ ஒரு கட்டத்தில் இசை கேட்டு மேடையில் மக்கள் கூட்டத்தில் இந்த இசையின் நெகிழ்வை மன நெகிழ்ந்து 5000 மக்கள் மத்தியில் உரையாற்றினார்கள். இந்து கலாசார திணைக்களம் அமைச்சர் P. P. தேவராஜ் அவர்கள் அந்த 2002ம் ஆண்டு "ஞான சிரோமணி" விருதை எனக்கு வழங்கி கௌரவித்தார்கள்.

பண்ணிசை பட்டத்துறை நிறுவிய "யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்" குறித்த பீடத்தின் நிரந்தர இசை விரிவுரையாளராக 1984 தொடக்கம் 2016 வரை பணியாற்றிய காலத்தில் 1996ல் சம்பந்தர் இசைநுட்ப ஆய்வு இயற்றி (M. Phil) முதுதத்துவமாணிப் பட்டத்தை இசையில் இலங்கையில் முதல் பெற்ற உயர்தர விரிவுரையாளராகவும் 1999 முதல் 2005 மற்றும் 2010 2013 வரை இசைத்துறைகளின் தலைவராக இருந்து அரும்பணி இசைத்துறைக்கும், பண்ணிசைதுறை வளர்ச்சிக்கும் ஆற்றப்பட்டது. 1991இல் பண்ணிசைபட்டத் துறையாக விசேடமாக நிறுவப்பட்டது : 1996 முதல் (Bachelor of Fine Arts)(Hons) பட்டம் பண்ணிசையில் வழங்கப்பட்டும் இன்றுவரை மிகச்சிறப்பாக இப்பாடநெறி உள்வாரி, வெளிவாரியாக வளர்ந்து வருகின்றது. "தென் ஆசியாவில் இத்துறையை உயர்பட்டத்துறையாக முதன்முதல் அங்கீகரித்த பெருமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு உரியது".

இதை வழிநடாத்திய பெரும் சிறப்பு நமக்கு உண்டு. 2004 2006ல் தமிழிசை மரபும், பன்னிரு திருமுறை நுட்பங்கள் பற்றி தஞ்சை பல்கலைக்கழகத்தில் பேராய்வு புரிந்து கலாநிதி (Doctor Philosophy in Music) PhD பட்டமும், அதற்கு மேல் பட்டங்கள் பலவும் துறைசார்ந்து 15 நாடுகளில் வழங்கப்பட்டன. இலங்கையில் முதல் இசைக் கலாநிதி மற்றும் முதல் மூத்த முதலாம் தர விரிவுரை இசையாளர் தரம் எனக்கு 2002ல் தரப்பட்டது. தொடர்ந்து 32 ஆண்டு (1984-2016) வரை சுமார் 18 உலக மகாநாடுகளில் இந்த பட்டக் கல்வியின் சிறப்புப்பற்றி உரையாற்றி உள்ளேன். தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பஞ்சமரபு, கர்ணாமிர்த சாகரம் யாழ் நூல் பல்கலை பணி கொண்ட காலத்தில் இத்துறை சார்பாக சிறப்புப் பணிக்காக கலைமாமணி, இசைப்பேரறிஞர், ஞானசிரோமணி, ஞானசிரோமணி, இசைத்தமிழ் வேந்தர், இசைத்தமிழ் வேந்தர், கலைக்குரிசில், கலாவிபூஷணர் சாகித்திய இசைப் பேரரசு, தமிழிசை மேரு என்ற வகையில் 23க்கு மேற்பட்ட விருதுகள் (தேசிய சர்வதேசிய) இலங்கை மாதாவிற்கும், பல்கலைக்கழகத்திற்கும் சமர்ப்பணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து விட்டேன். பண்ணிசையில் உயர்பட்ட ஆய்வுபீடம் எதிர்காலத்தில் அமையும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விரைவில் (Faculty of Post Graduate Studies in Music) அதற்கு பின்வரும் எனது நூல்கள் பெரிதும் துணை தரும்.

1. பன்னிரு திருமுறைகளின் இசைநுட்பம் (PhD) ஆய்வு.
2. சம்பந்தர் இசைவாண்மை (M. Phil) ஆய்வு.
3. பண்களின் பேரிலக்கணமும் வரைவுகளும்.
4. பண்குறிஞ்சியும் திறப்பண்களும் இதரவும்.
5. ஈழத்து இசை முல்லை பற்றிய நுண் ஆய்வு.
6. தமிழ் இசை மரபும் அதன் வளர்ச்சியும்.

என் ஆக்கமான இந்த நூல்கள் அச்சில் ஒப்புபார்க்கபடுகின்றது. 2025ல் சென்னையில் வெளியிடப்படும்.

இன்று நுண்கலைப்பீட பண்ணிசைபட்டத்துறை பொறுப்பாளராக டாக்டர் ஸ்ரீநாகபூஷணி அரங்கராஜ் BFA (Hons), M.A, M.Phil, PhD (India) பணி புரிகின்றார். இவர் சுமார் 30 உலக மகாநாடுகளில் ஆய்வுக்கட்டுரை (அங்கீகரிக்கப்பட்டவை) வழங்கி உள்ளார். இன்று தம் முதுமுனைவர் ஆய்வை முன்னெடுத்துச் செல்கின்றார். எதிர்காலத்தில் இத்துறை பட்டமேல் ஆய்வுபீடமாக அவசியம் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

குறித்த பண்ணிசை துறைவளர்ச்சியில் உலகநோக்கில் அதிஉயர் ஆற்றுகை, ஆய்வு மற்றும் உரைதிறன் மிக்க முதல் நிலைத்தலைவர் ஒருவரை யாழ் பல்கலைக்கழகம் கொண்டு மிளிர்வதும், இலங்கை யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் என்பதும் இங்கு குறிப்பிடற்பாலது : இத்துறை ஆற்றுகை மற்றும் ஆய்வு சம்பந்தமாக சுமார் 23 உயர் கௌரவப் பட்டங்கள் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் இசைப்பேரறிஞர், கலைமாமணி, டாக்டர் பேராசான் நா. வி. மு. நவரத்தினம் அவர்கள் மென்று விளங்குவது தமிழ் மக்களுக்கு கிடைத்த ஈழத்தின் பண்இசை மற்றும் இசைப்புலத்தின் அதிஉயர் வெற்றி எனலாம்.

2023ல் இவர்க்கு கிடைத்த "சர்வதேச இசைப் பேரறிஞர்" விருதும் மற்றும் ஐரோப்பிய பல்கலைக்கழக "மேன்மை பேராசிரியர்" விருதும் சான்று தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் முருகன் உற்சவ கால தெய்வீக இசையரங்கு நிகழ்வும், கௌரவிப்புக்களும்



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாந்த இசை நிகழ்வும் புதிய மாணவர்கள் இணைவுகளும், நிகழ்ச்சிகளும்



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைத் தமிழர்களின் தனித்துவமான அடையாளம் நவீன தமிழ் நாடகங்கள்

**கலாநிதி தேவநாயகம் தேவானந்த்**
செயல் திறன் அரங்க இயக்கம்

என்பதுகளிலிருந்து நாடகமும் அரங்கியலும் என்ற சொற்தொடர் தமிழர் மத்தியில் புழக்கத்தில் வர ஆரம்பித்திருக்கிறது. பொதுவாக நாடகம், அரங்கு என்ற இரு சொற்களும் ஒரே பொருளாகக் கருதப்படுகின்றன. ஆனால், இவை இரண்டுக்கும் முக்கியமான வேறுபாடு உண்டு. நாடகம் என்பது செயல் சார்ந்த படைப்பு உருவாக்கமாகும் அதாவது, நிகழ்த்தப்படும் கலை வடிவமாகும். அரங்கு என்பது அந்த நிகழ்த்தலின் செயற்பாட்டுப் படிமுறை அல்லது நடைமுறையாகும். ஆனால், பாரம்பரியமாக நாடகம், கூத்து என்ற சொற்கள் பயன்பாட்டில் உள்ளன.

மேற்கத்திய நாடக மரபுகள் கட்டமைப்பு, இலக்கியம், நிகழ்த்துவடிவங்கள் மீது மையம் கொண்டுள்ளன. ஆனால், தெற்காசிய நாடகங்கள் சடங்கு, புராணம் மற்றும் நிகழ்த்துக் கூறுகளை செறிவாக உள்ளடக்கியவையாகும். இவை சமூகம், அரசியல் மற்றும் மதத்துடன் நெருங்கிய தொடர்பில் இருக்கின்றன.

நாடகம் என்பது "உரையாடல் மற்றும் செயல்முறைகளின் மூலம் வாழ்க்கையை பிரதிபலிக்கும் கலை வடிவம்" என்று வரையறுக்கப்படுகிறது. தெற்காசிய நாடகங்களில், இது வெறும் கதைசொல்லலாக மட்டும் இல்லாமல், ஆன்மிக ஒழுக்கநெறிமுறை சார்ந்ததாக அமையப்பெற்றுள்ளதை அவதானிக்கலாம். தமிழக் கூத்துக்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். இவை பரம்பரிய புராணக் கதைகளைக் கொண்டு, பக்தி உணர்ச்சியை எழுப்ப அல்லது நேர்மறை சிந்தனையை தூண்ட உருவாக்கப்பட்டன.

அரங்கு என்பது "நாடகத்தை அரங்கேற்றுவதற்கான கலை வடிவம், அதில் நாடகக் குறிப்பு, நடிகர்கள், மேடை மற்றும் பார்வையாளர்கள் ஆகியவை ஒருங்கிணைக் கப்படுகின்றன" என்று வரையறுக்கப்படுகிறது. தெற்காசிய நாடகங்களில், இது ரசம் (உணர்ச்சி சாரம்) மற்றும் பாவம் (முகபாவம்) போன்ற கூறுகளால் வழி நடத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கத்திய நாடகமும், தெற்காசிய நாடகங்களும் வித்தியாசமான இலக்குகளை நோக்கி நகர்கின்றன. மேற்கத்திய நாடகங்கள் அதிகமாக அறிவு சார்ந்த மற்றும் கலைச் சீர்மையை நோக்கி இருக்கின்றன, ஆனால் தெற்காசிய நாடகங்கள் சமுதாயப் பாரம்பரியங்களை பாதுகாக்கும் கருவியாகவும் ஆன்மீக, சமூக வளர்ச்சியை முன்னெடுக்கும் கலை வடிவமாகவும் செயல்படுகின்றன. இந்த அடிப்படையில் இலங்கைத் தமிழ் நவீன நாடகங்கள் மேற்சொன்ன இரண்டு போக்குகளின் இணைவாக பிணைப்பாகக் காணப் படுவதை காணலாம்.

இவற்றின் மூலம் நாடகம் மற்றும் அரங்கு மனித உணர்ச்சிகளையும் சமூகப் பரிணாமங் களையும் பிரதிபலிக்கின்ற முக்கிய கருவிகளாக விளங்குகின்றன. நாடகம் மனித வாழ்வின் பிரதிபலிப்பு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இதனையே ஈழத்தமிழ் நவீன நாடக உலகும் உணர்த்துகிறது.

நாடகங்களை சடங்கு சார்ந்த (Ritual) நாடகங்கள், பாரம்பரிய (classical) நாடகங்கள், மக்கள் நாடகம் (folk/popular), மதம் சார்ந்த நாடகங்கள (Devotional), நவீன (modern) நாடகங்கள் என்று பார்க்கமுடியும்.

இலங்கையில் நவீன நாடகத்தின் தொடக்கத்தை பிரித்தானிய ஆட்சி காலத்தில் இருந்து இனம் காணலாம். பிரித்தானியா ஆட்சி இலங்கையின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. ஆங்கிலக் கல்வியும் பிரித்தானிய நிர்வாக அமைப்பும் மேற்கத்திய கலைகளின் மீது இலங்கை மேற்தட்டு சமூகத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தின. ஆங்கில நாடகங்கள் முதலில் கல்லூரி மற்றும் கல்வி நிறுவனங்களில் அரங்கேறின. இது பின்னர் மொழிபெயர்ப்புகள், உருமாற்றங்கள், மற்றும் மேற்கத்திய முறைப்படி எழுதப்பட்ட சுயவாக்க நாடகங்களாக மாறின.

இலங்கைத் தமிழ் நாடக மரபுகளில் நவீன காலம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது:

1. தமிழ்நாட்டில் உருவான அல்லது மொழிபெயர்க்கப்பட்ட நாடகங்கள்.
2. இலங்கைத் தமிழர்களால் எழுதப்பட்ட நாடகங்கள்.

கிராமப்புற இளைஞர்களிடையே மூன்றாவது வகை நாடக தயாரிப்புகளும் பிரபலமாக இருந்தன. அவர்கள் திரையில் ரசித்த திரைப்படங்களை மேடையில் ஏற்றினர். உண்மையில் அதுவொரு கேலிக்கூத்தாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில அறிஞர்கள் நமது கலை மற்றும் இலக்கியத்தில் குறைந்தபட்சம் மேற்கத்திய பாணியை பின்பற்றக்கூடாது என்று கருதுகின்றனர். ஆனால் நிஜ மற்றும் இயற்கை சிந்தனையை ஆதரிப்பவர்கள் கூட அறியாமலேயே மேற்கத்திய சிந்தனைக்கூடங்களின் தாக்கத்திற்கு உட்படுகிறார்கள். ஆனால், காலனித்துவத்திலிருந்து மீண்ட தேசிய இனங்களைப் போலவே, இங்கும் சில நாடகக் கலைஞர்கள் நமது நாடகம் மற்றும் நாடகத்தின் மரபு சமூகத்தின் கலாச்சார மற்றும் தத்துவ சிந்தனை மரபுகளில் வேரூன்ற வேண்டும் என்று உணர்ந்து செயல்படுகிறார்கள். இருப்பினும் அவர்கள் அந்நிய எண்ணங்கள் மற்றும் வடிவங்களுக்கு அக்கறையற்றவர்கள் அல்ல. நமது சமூகத்தை வளப்படுத்தக்கூடிய எந்தவொரு வெளிநாட்டு சிந்தனை அல்லது வடிவமும் ஒரு பண்பாட்டு வடிவத்தில் தமிழ் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதே நேரத்தில் மேற்கத்திய மற்றும் பிற கலாச்சாரங்களின் நாடகங்களின் உண்மையான மொழிபெயர்ப்புகள் நமது சமூகத்தில் ஆற்றுகைசெய்யப்பட்டு வளப்படுத்துகின்றன.

தேசியவாதமும் சர்வதேசியமும் அவற்றின் அந்தந்த எல்லைகளை அடையாளம் கண்டு வரையறுக்கின்றன. இலங்கைச் சிந்தனையில் ஐம்பதுகளின் முற்பகுதியில் தேசிய வாதம் ஒரு புதிய பரிமாணத்தை எடுத்தது தேசியவாதம் என்பது நேர்மறையானது, ஆனால் அது அதன் வரம்புகளைக் கடந்து, பல இன தேசத்தில் குறுகிய மனப்பான்மையாக வெளிப்படும்போது - விளைவு பேரழிவு தரும். ஆனால் ஒவ்வொரு எதிர்மறைச் செயலும் குறைந்தபட்சம் ஒரு தொலை தூர நேர்மறையான அம்சத்தைக் கொண்டிருக்கும். தேசியவாதம் இலங்கையில் உள்ள இரு இனங்களான சிங்களவர்கள் மற்றும் தமிழர்களை தங்கள் வேர்களை மீண்டும் கண்டுபிடிக்க கட்டாயப்படுத்தியது.

இலங்கைத் தமிழர்களிடையே பாரம்பரிய நாடகத்தின் மறு கண்டுபிடிப்பு பல ஆக்க பூர்வமான படிகளுக்கு வழிவகுத்தது. இலங்கைத் தமிழர்களுக்கான தேசிய நாடகத்திற்கான தேடல் பல நல்ல நாடக பாணிகளின் அறுவடைக்கு வழிவகுத்தது. அதே நேரத்தில், ஆங்கிலக் கல்வி பெற்ற உயரடுக்கினரால் பண்பாடற்றதாகவும், நுட்பமற்றதாகவும் பார்க்கப்பட்ட நாட்டுப்புற அல்லது பாரம்பரிய நாடகம், படித்தவர்கள் மற்றும் நகர்ப்புற மக்களிடையே அங்கீகாரத்தைப் பெற்றது. அந்தக் கலையின் கலைஞர்கள் நம்பிக்கையை மீண்டும் பெற்று, மிகுந்த ஆர்வத்துடன் தங்கள் நாடகப் பணிகளைத் தொடர்ந்தனர். இந்தப் பணி இன்றுவரை தொடர்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன மேற்கத்திய நாடகம் பற்றிய அறிவும், பூர்வீக நாட்டுப்புற நாடகங்களின் மீதான ஆர்வமும் ஆய்வும் நவீன நாடக தயாரிப்புகளின் புதிய பாணிகளின் பிறப்புக்கு வழிவகுத்தன. பல நவீன நாடக ஆளுமைகளால் பயன்படுத்தப்பட்ட பூர்வீக நாட்டுப்புற நாடகத்தின் மரபு, பார்வையாளர்கள் நாடகங்களை எளிதில் புரிந்துகொள்ள உதவியது.

மேற்குலகில் போற்றப்படும் நாடகக்கலைஞர் பிரெக்டின் ‘அந்நியப்படுதல்’ நுட்பம் என்பது எமது பாரம்பரிய நாடகத்துக்குப் புதிதானது அல்ல. பிரெக்டின் நாடகத்தில் காணப்படும் கதை, அந்நியப்படுதல், எபிசோடிக் அமைப்பு, பாடல் மற்றும் நடனம் - உண்மையில் அவர் பாரம்பரிய சீன மற்றும் ஜப்பானிய நாடகங்களிலிருந்து இந்த கூறுகளை கடன் வாங்கினார். இந்த ஆற்றுகை முறைமை இலங்கைத் தமிழர்களின் நாட்டுப்புற நாடகங்களிலும் காணப்படுகின்றது.

இனவிடுதலைக்கான போரும், தமிழர்கள் தங்கள் அடையாளத்தையும் தேசியத்தையும் தக்க வைத்துக் கொள்வதில் காட்டிய ஆர்வமும் கிட்டத்தட்ட அனைத்து கலைஞர்களையும் தங்கள் சொந்த தயாரிப்புகளில் தங்கள் பாரம்பரிய கலைகளின் வேரைக் கண்டுபிடிக்க ஊக்குவித்தன.

இந்த நாடகப் போக்கு படச்சட்ட மேடையில் மட்டும் தன்னை மட்டுப்படுத்த வில்லை. அது மக்களை அவர்களின் தெருக்கள், சந்திப்புகள், சந்தைகள், வயல்கள், பனைமர வெளிகள் மற்றும் தென்னம் தோப்புகளில் சந்திக்கச் சென்றது. இந்த நாடகத்தின் மொழி பார்வையாளர்களை கலைஞர்களுடன் நெருக்கமாகக் கொண்டு வந்தது.

இந்த வகையில் இலங்கைத் தமிழர்களின் நவீன நாடகங்களை பல்வேறு வகையாக நோக்கமுடியும்,

1) மேற்கத்திய முறையில் யதார்த்தமான நாடகங்கள்
2) திரையின் தழுவலான சினிமா நாடகம்
3) உயர்தர மொழி அமைப்பு மற்றும் காதல் நடிப்பு கொண்ட வரலாற்று நாடகங்கள்
4) “பரதநாட்டியம்” நடன பாணியை அடிப்படையாகக் கொண்ட நடன நாடகங்கள்
5) பாரம்பரிய நாடகக் கூறுகளை உள்ளடக்கிய பிரெக்டின் பாணியை அடிப்படையாகக் கொண்ட யதார்த்தமற்ற நாடகம்
6) பாரம்பரிய நாடகங்களை படச்சட்ட மேடைக்கு மாற்றிய நவீன மயமாக்கப்பட்ட தயாரிப்புகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) ஒருபக்க ஆற்றுகையுடன் கூடிய மற்றும் பார்வையாளர் சூழவிருந்து பார்க்கும் இரண்டும் கலந்த தெரு நாடகம்
8) சிறுவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சிறுவர் நாடகம்
9) கல்வித் தேவைகளையும் மாணவர்களின் சமூகத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பாடசாலை நாடகம்.

மேற்கண்ட நாடக வடிவங்கள் நாடகக் கழகங்கள், சங்கங்கள், சமூக மையங்கள், பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களால் மேற்கொள்ளப்படு கின்றன. இவை ஒவ்வொரு நாடக வகைகள் பற்றியும் விரிவாகப்பார்க்கப்பட வேண்டும். விரிவஞ்சி தவிர்த்துக் கொள்கின்றேன்.

இலங்கைத் தமிழர்களிடையே நவீன நாடகத்தின் சமகாலப்போக்கு "உள்நாட்டுப் போர்" தொடங்கியதிலிருந்து தொடங்கியது. கடந்த ஒரு தசாப்த காலம் வரை தமிழர்களின் பாரம்பரிய தாயகமான இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில், போர் நடத்தப்பட்டது. இன்று இங்கு அமைதி நிலவுகிறது, அதே வேளை நிச்சயமற்ற சூழலும் உணரப்படுகின்றது.

இங்கு, சமகால நாடகம் எண்பதுகளில் முகிழ்த்து பெற்று தொண்ணூறுகளில் வீரியமடைந் திருந்ததைக் காணலாம். சிறுபான்மையினரின் உரிமைகளுக் காகவும் ஒடுக்குமறைக் கெதிராக போராடிய வகையில் அதன் வீரியத்தையும் திசை உணர்வையும் இந்தக்கால நாடகங்கள் தமதாக்கிக் கொண்டன.

இதற்கு மேலாக என்.ஜி.ஓ. கலாச்சாரமும் நாடகத்துறையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இவை நிதி நிறுவனங்களாக, போரால் சிதைந்த நிலத்தின் மறுசீரமைப்பு, மற்றும் மறு உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த நிறுவனங்கள் நாடகத்தின் வலிமையை ஒரு தொடர்பு ஊடகமாக அறிந்திருக்கின்றன. அவர்கள் ஆர்வமுள்ள அரங்கச் செயலாளிகளிடமிருந்து திட்ட அறிக்கைகளைக் கோருகிறார்கள். அமைதி, நட்பு, சுய-உணர்தல் மற்றும் மக்களுக்கு உதவும் என்று அவர்கள் நம்பும் பல கருப்பொருள்களில் நாடகம் செய்வதற்காக, நாடகங்களை தயாரிப்பதற்கு நிதியளிக்கிறார்கள். உண்மையில் இது பலரை நாடகப் பணிகளைச் செய்ய ஊக்குவித்தது. என்.ஜி.ஓ. நிதியளித்த நாடகத் திட்டங்கள், அதன்அரங்கச் செயலாளிகள் நாடக மேடையிலிருந்து இறங்கி புதிய வெளிகளில் அகதிகள் முகாம்கள் மற்றும் தொலைதூர குக்கிராமங்கள் போன்ற அவர்களின் சொந்த இடத்தில் தங்கள் இலக்கு பார்வையாளர்களைச் சந்திக்க ஒரு தளத்தை வழங்கியுள்ளன. எனவே, கிராமப்புற மக்களுக்கும் இது ஒரு புதிய மற்றும் உற்சாகமான அனுபவமாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்பணிகளுக்கு பின்னால் மேற்குலகின் நாடக மேதைகளான க்ரோடோஸ்கி, ரிச்சர்ட் செக்னர், ஓகஸ்ராபோல் போன்றவர்களின் சிந்தனாக் கூடத்தின் தாக்கத்தையும் மறுப்பதற்கில்லை. இங்கு அரங்கச் செயலாளிகள் என்ற சொற்றொடர் புதிதாக அறிமுகமாகிப் பயன்படுத்தப் படுவதையும் அவதானிக்கலாம். இந்த சொற்றொடர் இந்த நாடக ஆளுமைகளின் நோக்கத்தை தெளிவாகக் குறிக்கிறது - அதாவது. அவர்கள் மக்களுக்கு கல்வி கற்பிப்பதையும், வறுமையின் பிடியிலிருந்து வெளியே வர உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளனர். இங்கு இந்த வகையான அரங்கில் அரிஸ்டாட்டிலிய சார்புகளை முற்றிலுமாக நிராகரிக்கிறார்கள். அவர்கள் நடிப்பை ஒரு செயலின் பிரதிபலிப்பாகவே கருதுகின்றனர். யாரொருவரும் நடிக்கமுடியும் என்ற கொள்கைச் சித்தாந்தத்தைக் கொண்டிருக்கிறார்கள். இதில் நடிப்பு என்பது போலியானது அல்ல அது நிஜமானது என்ற வலுவான கருத்துநிலையைச்சார்ந்தே சமகால நாடகப் போக்கை இனங்காணலாம். இங்கு கலைஞர்கள் மற்றும் பார்வையாளர்கள் என இரண்டு குழுக்கள் இல்லை. இருவரும் இருந்தாலும், அவர்கள் அனைவரும் பங்கேற்பாளர்கள். "நடிகர்கள்" தங்கள் உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள்.

உணர்ச்சி பரவசத்தின் உச்சத்தை அடைய பங்கேற்பாளர்களின் உணர்வுகளைத் தூண்டி, இறுதியாக உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்த்து அமைதியில் முடிவடைகிறது. இந்தக் கோட்பாட்டை நம்புபவர்கள் சடங்குகளின் தன்மைகளை நாடுகிறார்கள். இந்த சடங்கு மனிதனின் முதல் நாடகம் மேலும் இந்த சடங்கு பண்டைய மனிதன் உணர்ச்சி பங்கேற்பு மூலம் தனது உண்மையான சுயத்தை உணர உதவியது. அவன் தன்னைக் கண்டுபிடித்து தனது பிரச்சினைகளிலிருந்து வெளியேற ஒரு வழியைக் கண்டுபிடித்தான். எனவே, இந்தக் கோட்பாட்டை நம்புபவர்களின் நாடகம், மத சடங்குகளிலிருந்து பல கூறுகளை கடன் வாங்குகிறது. இது சிகிச்சை உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது. எனவே, இந்த அரங்கச் செயற்பாட்டாளர்கள் நாடக சிகிச்சையை நாடுகின்றனர் மற்றும் சிகிச்சையைப் பற்றிய சில அறிவைப் பெற முயற்சிக்கின்றனர். இந்த நடவடிக்கைகள் இன்னும் ஆரம்ப கட்ட நிலையிலேயே காணப்படுகின்றன. இந்தச் செயற்பாடுகளின் விளைவுகளை பயன்களை மதிப்பிட முடியவில்லை.

மேற்கூறிய நாடக நடவடிக்கைகளின் சாதக பாதகங்கள் குறித்து நிறைய விவாதங்கள் நடந்து வருகின்றன. ஒவ்வொரு புதிய முயற்சிக்கும் விமர்சனங்களையும் நிராகரிப்புகளையும் எதிர் கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய நிராகரிப்புக்கள் நாளைய ஏற்றுக் கொள்ளல்களாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இந்த நாடகம் சில நாடக ஆர்வலர்களால் முற்றிலுமாக நிராகரிக்கப் படுகிறது. இதை அவர்கள் நாடகமாகக் கருதவில்லை, நாடகத்தின் சில கூறுகள் மட்டுமே இங்கு பயன்படுத்தப்படுகின்றன. ஆதனால், இவை நாடகம் அல்ல என்று நிராகரிக்கப்படுகின்றது. ஆனால் அரங்கச் செயலாளிகள் இந்த விமர்சகர்களின் பார்வையை முற்றிலுமாக நிராகரிக்கின்றனர். அவர்கள் கூறுகிறார்கள், "அழகியல் சமூகத்தாலும் காலத்தாலும் கட்டமைக்கப்படுகிறது" எனவே அது காலத்திற்கு காலம், சமூகத்திற்கு சமூகம் வேறுபடுகிறது.

எல்லா காலத்திற்கும், அனைத்து மனிதகுலத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அழகியல் இருக்க முடியாது. கலை முழுமை மற்றும் அழகியல் என்பது யாருக்காக, எந்த இடத்தில், யார் என்ற அடிப்படையில் சிந்திக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட மக்கள் குலத்தால் அனுபவிக்கப்படும் ஒரு கலைப்படைப்பு. மற்றொருவரால் முழுமையாக நிராகரிக்கப்படுகிறது.

கலை முழுமை மற்றும் அழகியல் குறித்த இந்த சர்ச்சை என்றென்றும் தொடரும் ஏனென்றால் புதிய முறைகள் நேரம் மற்றும் போக்குடன் ஒரு இடத்தைக் கண்டுபிடிக்கும். ஆனால் நாம் அனைவரும் ஒரு அம்சத்தில் தெளிவாக இருக்க வேண்டும்: எந்த குறிப்பிட்ட பாணியும் அனைத்து மக்களையும் ஈர்க்காது. பாணிகள் மற்றும் வெளிப்பாடு முறைகள் பார்வையாளர்களின் அனுபவத்தைப் பொறுத்தது. அது ரசனை அனுபவத்தின் மூலம் வருகிறது. "சுவை வேறுபடுகிறது" என்பதை நிராகரிக்க முடியாது.

நாடகத்தில் "சொற்கள்" என்பது குறித்து மற்றொரு சர்ச்சை உள்ளது, அதாவது, நாடக தயாரிப்புகளில் மொழி இருப்பது அவசியமாகக் குறிக்கப்படுகின்றது. மொழி என்பது பண்பட்ட மனிதனின் மிகவும் நுட்பமான வெளிப்பாட்டு முறை என்று சிலர் வாதிடுகின்றனர் எனவே உரையாடல் என்பது நாடகத்தின் மிக முக்கியமான உறுப்பு என்ற வாதமும் உண்டு. ஒரு நாடகச் செயலை உரையாடல்கள் தான் பூர்த்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்தக்கருத்து முன்வைக்கப்படுகின்றது.

ஆனால் உடல் மொழிதான் முக்கியமானது, அதுவே தொடர்பாடலின் மூலமானது என்ற மற்றொரு சிந்தனைப் பள்ளி உள்ளது. "உடல் மொழி" என்பது நாடகத்தின் மொழி என்று அவர்கள் உணர்கிறார்கள் பார்வையாளர் நாடகத்தைக் கேட்க அல்ல, நாடகத்தைக் காண வருகிறார் என்பது இதன் அடிப்படையாகவுள்ளது.

சுமகால ஈழத்து தமிழ் நவீன நாடகப் போக்கில் மேற்கூறிய இரண்டும் முற்றிலும் எதிர் எதிரான குழுக்களுக்கு இடையில் நடுவில் நிற்கும் மூன்றாவது குழு உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக வெளிப்பாட்டில் வாய்மொழி மொழி மற்றும் உடல் மொழி இரண்டும் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று அவர்கள் நம்புகிறார்கள். நாடகக் கலைஞருக்கு இரண்டையும் பயன்படுத்த சுதந்திரம் உள்ளது.

மேற்கண்ட மூன்று சிந்தனைப் பள்ளிகளும் மூன்று வகையான நாடக நிகழ்ச்சிகளை உருவாக்கியுள்ளன:

1) ஏராளமான நீண்ட உரையாடல்கள், பேச்சுகள் மற்றும் குறைவான அசைவுகள் மற்றும் அசைவியக்கங்களைக் கொண்ட நாடகங்கள்
2) நடனம் போன்ற மிகைப்படுத்தப்பட்ட சைகைகள், ஊமம் மற்றும் இசை ஆகியவற்றால் நிறைந்த நாடகங்கள்
3) உரையாடல்கள், அசைவுகள், சைகைகள், நடனம் மற்றும் இசைக்கு கணிசமான இடத்தைக் கொடுக்கும் நாடகங்கள்

பல்வேறு நாடகப்பாணிகளை ஒன்றிணைத்து உருவாகும் நாடகப்பாணி உலகம்முழுவதும் காணப்படுகின்றன.

மேற்கூறிய நாடக நடவடிக்கை மற்றும் சிந்தனையைத் தவிர, கிராமப்புற மக்களிடையே நாட்டுப்புற நாடக நடவடிக்கைகள் தொடர்கின்றன. நகர்ப்புற மக்களும் அவற்றின் கலாச்சார வேர்களைக் காண ஒரு வாய்ப்பைப் பெறுகிறார்கள். ஆனால் இன்றய இளைஞர்களுக்கு, இந்த நாட்டுப்புற நாடகங்கள் மிகவும் "அன்னியமானவை" அவர்களுக்கு அவற்றை அடிக்கடி காண வாய்ப்பு இல்லை. இதன் விளைவாக அவர்கள் நாட்டுப்புற நாடகத்தின் அழகியலுக்குப் பரிச்சயமற்றவர்கள். எனவே அவர்கள் ஒரு கொடுப்புச் சிரிப்புடன் அவற்றைப் பார்க்கிறார்கள்.

இது மீண்டும் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது. "நமது நாட்டுப்புற பாரம்பரிய நாடகங்களை நாம் என்ன செய்ய வேண்டும்? காலத்தால் அவை சிதைந்து போக நாம் அனுமதிக்க வேண்டுமா? அவை காலத்தால் மாறாதனவா? அவற்றை அருங்காட்சியகப் படைப்புகளாக வைத்து, அவ்வப்போது அவற்றை நிகழ்த்தி, வெளிநாட்டு பிரமுகர்களை மகிழ்வித்து, நமது தேசிய அடையாளத்தையும் மகிமையையும் காட்டினால் போதாதா? அல்லது, நமது இளைஞர்கள் மற்றும் இளைய தலைமுறையினரிடையே அவற்றைப் பிரபலப்படுத்துவது நமது கடமையா? இதுபோன்ற கேள்விகள் பலரின் இதயங்களில் கடுமையாக ஒலிக்கின்றன. இதுபோன்ற எண்ணங்கள் நமக்கு மட்டும் தனித்துவமானவை அல்ல. வெளிநாட்டு ஆதிக்கத்தின் பிடியில் இருந்த மூன்றாம் உலக மக்கள் அனைவரும், இப்போது, சுதந்திரத்திற்குப் பிறகு, தங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுகள் காலத்துடன் மறைந்து போக ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது என்று நினைக்கிறார்கள். இந்த சமூக உளவியல் சில தனிநபர்கள் மற்றும் குழுக்களில் அதிர்ச்சிகரமான நிலைக்கு உயர்ந்துள்ளது. இந்த விடயத்தில் ஒரு சமநிலையான சிந்தனை மிகவும் அவசியமாகிறது. பாரம்பரியம் சமூகத்தில் ஒரு இடத்தைப் பிடித்துள்ளது. அதேபோல், பாரம்பரிய நாடகங்களும் ஒவ்வொரு சமூகத்திலும் ஒரு இடத்தைப் பிடிக்க வேண்டும். ஆனால் தற்போதைய சமூகத்தில் அதன் இடம் என்ன? கடந்த காலங்களில் இருந்ததைப் போல, அது ஒரு பரவலான கலையாக இருக்க முடியுமா?. இன்றைய சமூகத்தில் அதன் இடமும் முக்கியத்துவமும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்றாலும், அது நேற்று இருந்ததைப் போல பிரபலமாக இருக்க முடியாது ஏன்பதே உண்மை.

நீண்ட போருக்குப் பிறகு சமாதானம் “திணிக்கப்பட்ட” நிலையில், மனதில் மகிழ்ச்சி மற்றும் மகிழ்ச்சியான சூழல் முளைக்கிறது. போரில் இழந்த ஆண்டுகளை ஈடுசெய்ய அவர்கள் அவசரப்படுகிறார்கள். அதேவேளை, போரின்பின்னான தமிழர் நாடகங்கள் படச்சட்ட மேடையில் மட்டுப்பட்டுக் கொள்கின்றன. அதுவே நாடகமாக கல்விக்கூடங்களில் கற்ப்பிக்கப்படுகின்றன.
முடிவாக, இலங்கைத் தமிழர்களின் நாடகம் அதன் அடையாளத்தைப் பராமரிக்க உதவும் பல தனித்துவமான காரணிகளைக் கொண்டுள்ளது. இந்த மக்களுக்கு இந்த தீவில் ஒரு நீண்ட வரலாறு மற்றும் பாரம்பரியம் உள்ளது. அவர்களின் சடங்குகள், நாட்டுப்புற மரபுகள், நவீன மரபுகள், சமகால கண்டு பிடிப்புகள் சிறப்பானவையாக உள்ளன. அவற்றின் தொடர்ச்சி நீண்ட நேரியல் முன்னேற்றக் கோட்டைக் கொண்டுள்ளன.

நவீன மற்றும் சமகால நாடகங்கள் கூட இந்த மக்களின் அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்ள கணிசமான அளவிற்கு உழைத்துள்ளன. எதிரெதிர் கருத்துக்கள், திறந்த விவாதங்கள், வெவ்வேறு செல்நெறிகள், அர்ப்பணிப்புடன் கூடிய அயராத முயற்சிகள் எப்போதும் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை வழிநடத்தும் சூழலைத் தந்துநிற்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டபம் புனரமைப்பதிற்கு கனடாவிலிருந்து நன்கொடை வழங்கியோர்

| நன்கொடை அளித்தவர்கள் | நன்கொடை தொகை (CAD) |
|---|---|
| 1. பொன் சுந்தரலிங்கம் | 10302 |
| 2. ரதிரூபன் பரம்சோதி (லயபிருந்தம் நுண்கலைக்கூடம்) | 5000 |
| 3. ரமணன் கிருஷ்ணராஜ குருக்கள் | 5000 |
| 4. ரங்கநாதன் பத்மநாதன் (நியூ ரங்கனாஸ் நகைமாடம்) | 1000000 LKR |
| 5. அனுஷா உதயகுமாரன் | 4405 |
| 6. குகேந்திரன் கனகேந்திரன் (கலைக்கோவில் நுண்கலை அக்கடமி கனடா) | 4000 |
| 7. ஜெயந்தி லிபாகரன் (சாய் நாதம் ஃபைன் ஆர்ட்ஸ் அக்கடமி) | 3500 |
| 8. பவித்திரன் தங்கவடிவேலு லிலானி தங்கவடிவேலு | 3000 |
| 9. விதுரன் வாமன் ராஜசிவாசிவசுப்பிரமணியம் | 3000 |
| 10. முன்னாள் வர்த்தக சம்மேளனம் கேதா நடராஜா | 2500 |
| 11. டாக்டர் சபேசன் | 500000 LKR |
| 12. அபிஷன் அனக்ஷன் நந்தகுமார் | 2035 |
| 13. அருஷன் அனோஜன் சுதாகரன் | 2000 |
| 14. அஞ்சனன் அர்வின் சிவகுமார் | 2000 |
| 15. சோமசுந்தரம் அர்த்தனன் | 2000 |
| 16. சுதர்சன் வல்லிபுரம் | 2000 |
| 17. ராகவன் துரைசிங்கநாதன் (சிவாலயா மிருதங்கம் அக்கடமி) | 1999.69 |
| 18. யதுஷன் ஆலினி ரவிச்சந்திரன் | 2000 |
| 19. நரேந்திரா தில்லையம்பலம் (நந்தி நுண்கலைக்கூடம்) | 2000 |
| 20. கானப்பிரியா காவியன் பொன் சுந்தரலிங்கம் | 2000 |
| 21. தனதேவி மித்ரதேவா (ஸ்ருதிலயா ஃபைன் ஆர்ட்ஸ் அக்கடமி கனடா) | 1500 |
| 22. கேனிஷா உதயகுமாரன் | 1250 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 23. | அர்ச்சனா அருண்யா அபிநயா சித்திவிநாயகம் | 1200 |
| 24. | Dr. தயாபரன் செல்வநாயகம் (வேணுகானாலயம்) | 1250 |
| 25. | பிரதீப் சியாமா கந்தசாமி | 1100 |
| 26. | ஜெயலட்சுமி ரவீந்திரன் (கார்த்திகேயன் கலைக்கூடம்) | 1000 |
| 27. | நவயுகா வரதா விவேகானந்தன் | 1000 |
| 28. | ஓவியா கேதீசன் | 1000 |
| 29. | ஷீலா சுகுமார் | 1000 |
| 30. | ஜனுஜா சிவானந்தன் | 1000 |
| 31. | டாக்டர் சிவாஜி | 1000 |
| 32. | ருக்ஷா சிவானந்தன் | 1000 |
| 33. | தமிழ்ச்செல்வி சுமந்திரன் | 1000 |
| 34. | ஓவியா தவகுமார் | 1000 |
| 35. | நிரூபன் நாகேந்திரன் நிருத்திகா சுஜீவன் | 1000 |
| 36. | லக்ஷிகா ரகுராமன் | 1000 |
| 37. | ஸ்ரீராம் ஸ்ரீகுமரன் ஞானச்செல்வம் | 1000 |
| 38. | உமாதேவி சிவகுமார் | 700 |
| 39. | வாணி கோபிநாத் (தில்லை கலாலயம் நடன அக்கடமி) | 500 |
| 40. | ராஜி சிவானந்தன் | 500 |
| 41. | ஸ்ரீகுமரன் ஸ்வர்ணா | 500 |
| 42. | ராதிகா நவநீதசர்மா | 500 |
| 43. | வாமனன் வாரணன் அரங்கன் விஜேந்திரா | 500 |
| 44. | பஞ்சாபிகேசன் நாகேந்திரம் | 100000 LKR |
| 45. | லோகேந்திரலிங்கம் நாகமணி (உதயன் பத்திரிகை) | 400 |
| 46. | கௌரி தெய்வேந்திரம் | 300 |
| 47. | V K புருஷோத்தமன் | 50000 LKR |
| 48. | ஸ்ரீதரன் T | 50000 LKR |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டபம் புனரமைப்பதிற்கு ஐரோப்பாவிலிருந்து நன்கொடை வழங்கியோர்

| நாடு | நன்கொடை அளித்தவர்கள் | நன்கொடை தொகை (LKR) |
|---|---|---|
| லண்டன் | இசை ஆசிரியர் பரமசாமி அவர்களின் நினைவாக: கிருபாகரன் பரமசாமி (ஆவர்த்தன இசை மன்றம்) | 1281660 |

| நாடு | நன்கொடை அளித்தவர்கள் | நன்கொடை தொகை (LKR) |
|---|---|---|
| சுவிஸ் | வசந்தன் பத்மலிங்கம் (ஸப்தஸ்வராலயம் சுவிஸ் பிரான்ஸ்) | 1500000 |
| சுவிஸ் | மங்களநாயகி வசந்தகுமாரன் (சலங்கை நர்த்தனாலய அதிபர்) | 334000 |
| ஆஸ்திரேலியா | பாலஸ்ரீ ராசையா (மிருதங்கம் ஆசிரியர்) | 250000 |
| சுவிஸ் | பண்டிதர் நவரத்தினம் மங்கையக்கரசி சண்முகதாசன் | 200000 |
| சுவிஸ் | வளர்மதி கேதீஸ்வரன் | 100000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு புலம்பெயர் கலைஞர்கள், எம் மண் கலைஞர்கள் நிகழ்வும், கௌரவிப்பும்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By: Guru Printers - 021 221 4777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org